VISIT…

மகிழ்ச்சிக்கு வழி

மேலான வாழ்வுக்கு ஒரு பகுத்தறிவு வழிகாட்டி

_____ அவர்களுக்கு

அன்புடன் _____

இப்புத்தகத்தை உபயோகிப்பது எப்படி?

நீங்கள் உங்களுடைய நண்பர்களுக்கும், உங்களோடு தொடர்புடையவர்களுக்கும் உதவி செய்ய விரும்புகிறீர்கள்.
ஒருவரது செயல்கள், உங்கள் வாழ்க்கையை சிறிய அளவிலாவது பாதிக்கக் கூடும் என்று நீங்கள் கருதும் ஒரு நபரைத் தெரிந்தெடுங்கள்.
அந்நபருடைய பெயரை இப்புத்தகத்தில் முன் அட்டையின் முதல் கோட்டில் எழுதுங்கள்.
உங்களுடைய பெயரையோ, முத்திரையையோ அப்பக்கத்தின் இரண்டாவது கோட்டில் எழுதுங்கள்
இப்புத்தகத்தை அந்நபருக்கு அன்பளிப்பாகக் கொடுங்கள்.
அந்நபரை இப்புத்தகத்தை வாசிக்கச் சொல்லுங்கள்0. பிறருடைய தவறான செயல்களால் உண்டாகும் பாதிப்பிற்கு உள்ளாகும் நிலையில், அந்நபரும் இருக்கிறார் என்பதை நீங்கள் காண்பீர்கள்.
அவரிடம் இப்புத்தகத்தின் பல பிரதிகளைக் கூடுதலாகக் கொடுங்கள்.
உங்கள் பெயர் எழுத வேண்டிய இடத்தில் அவர் தன்னுடைய பெயரை எழுதட்டும், தன்னுடைய வாழ்க்கையோடு தொடர்புடையவர்களுக்கு அவர் இப்புத்தகங்களை அன்பளிப்பாகக் கொடுக்கட்டும்.

இச்செயலை நீங்கள் தொடர்ந்து செய்வதின் மூலம்
உங்களுடைய மற்றும் பிறருடைய நீடித்த வாழ்வின்
நிச்சயத்தைமேம்படுத்திக் கொள்வீர்கள்.

0. வார்த்தைகள் சிலநேரங்களில் வேறு பல அர்த்தங்களை கொண்டிருக்கின்றன. இப்புத்தகத்தின் பக்கங்களில் காணப்படும் அடிக்குறிப்புகள், அவ்வார்த்தைகள் இப்புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பொருளிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் அறியாத வேறு வார்த்தைகளை காண்பீர்களாகில் ஒரு நல்ல அகராதியில் அதன் பொருளைக் காணுங்கள். அப்படி இல்லாத பட்சத்தில் தவறாகப்புரிந்து கொள்ளுதலும், விவாதங்களும் எழும்பக்கூடும்.

இப்புத்தகத்தை நான் உங்களுக்குக் கொடுப்பதின் நோக்கம்.

நீடித்த வாழ்வின்[1] தடைகளை நீங்கள் மேற்கொள்ளுதல் எனக்கு முக்கியம்.

மகிழ்ச்சி[2]

உண்மையான சந்தோசமும், மகிழ்ச்சியும் விலைமதிப்பற்றவை. ஒருவரின் வாழ்வு நீடித்திராவிட்டால் எவ்வித சந்தோசமும், மகிழ்ச்சியும் பெற்றுக் கொள்ள முடியாது.

குழப்பங்கள்[3], உண்மைக் குறைச்சல்களுடன் நடைமுறையில் நன்னடத்தையற்ற[4] ஒரு சமுதாயத்தில் நீடித்து வாழ முயற்சிப்பது கடினமானது.

தனி மனிதரோ அல்லது குழுவோ, வாழ்க்கையில் தாங்கள் பெறக்கூடிய இன்பத்தையும், வேதனையிலிருந்து விடுதலையையுமே நாடுகிறார்கள்.

உங்களுடைய வாழ்வின் நீடிப்பு உங்களைச் சுற்றியுள்ளவர்களின் தீய செயல்களினால் அச்சுறுத்தலுக்குள்ளாகக் கூடும்.

மற்றவர்களுடைய உண்மைக் குறைச்சலினாலும், தவறான நடக்கைகளினாலும் உங்களுடைய மகிழ்ச்சி துக்கமாகவும், பரிதாபமாகவும் மாறக் கூடும்.

---

1. நீடித்த வாழ்வு: பிழைத்திருக்கும் செயல், தொடர்ந்து உயிர் வாழ்தல்
2. மகிழ்ச்சி: நன்றாக இருக்கும் நிலை, திருப்தி, இன்பம், களிப்பு, மலர்ச்சி, கலக்கமற்ற வாழ்வு
3. குழப்பம்: முற்றிலும் கட்டுப்பாடற்ற அல்லது குழப்பமுற்ற இயல்புடைய
4. நன்னடத்தையற்ற: ஒழுக்கமற்ற, நன்னடத்தைகளை பின்பற்றாமை, சரியானதை செய்யாமை, நன்னடத்தையைக்குறித்த அறிவின்மை.

இத்தகைய சம்பவங்களை உங்கள் வாழ்வில் நீங்கள் நினைவு கூற முடியும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. இச்சம்பவங்கள் ஒருவரது வாழ்வின் உறுதியை சிதைத்து மகிழ்ச்சியைக் கெடுக்கின்றன.

அநேகருக்கு நீங்கள் முக்கியமானவர். அவர்கள் உங்கள் வார்த்தைகளுக்கு செவி கொடுக்கிறார்கள். நீங்கள் மற்றவர்களிடத்தில் மாற்றத்தை உண்டு பண்ண முடியும்.

நீங்கள் அறிந்திருக்கிற மக்களுடைய சந்தோசமும், துக்கமும் உங்களுக்கு முக்கியமானவை.

அதிக சிரத்தை எடுக்காமல், இப்புத்தகத்தை உபயோகிப்பதன் மூலம், நீடித்த வாழ்வின் உறுதியுடன் மகிழ்ச்சியாக வாழ அவர்களுக்கு நீங்கள் உதவ முடியும்.

பிறர் மகிழ்ச்சியாக வாழ ஒருவரும் உத்தரவாதம் அளிக்க இயலாது என்ற போதிலும் அவர்கள் மகிழ்ச்சியாகவும், வாழ்வில் உறுதியாகவும் இருக்கக்கூடிய வாய்ப்புகளை அதிகரிக்க முடியும். அவர்களுடைய மகிழ்ச்சியும், வாழ்வின் உறுதியும் மேம்படுவதினால் உங்களுடைய மகிழ்ச்சியும், வாழ்வும் மேம்படும்.

ஆபத்து குறைந்த மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு
வழி காட்டும் ஆற்றல் உங்களிடம் உள்ளது.

1. உங்கள் உடல் நலன் நாடுங்கள்

1-1. நோயுறும் போது சிகிச்சை பெறுங்கள்.

மற்றவர்களுக்கு பரவக் கூடியத் தொற்று நோயால் வியாதிப்பட்டிருந்தாலும் கூட, அநேக சமயங்களில் மக்கள் சரியான சிகிச்சையை நாடாமலும் மற்றவர்களிடமிருந்துத் தங்களை தனிமைப்படுத்தாமலும் இருக்கின்றனர். நீங்கள் எளிதில் உணர்வதைப் போல் இப்படிப்பட்டவர்களால் உங்களுக்கு ஆபத்து வரக்கூடும். ஒருவர் வியாதிப்படும்போது சரியான முன்னெச்சரிக்கைகளை கடைபிடிக்கவும் முறையான சிகிச்சை பெறவும் வலியுறுத்துங்கள்.

1-2 சரீரத்தை சுத்தமாக வைத்திருங்கள்.

தினந்தோறும் நீராடாமலும், அடிக்கடி கைகளைக் கழுவாமலும் இருப்பவர்கள் கிருமிகளை சுமக்கிறவர்களாயிருக்கக் கூடும். அப்படிப்பட்டவர்கள் உங்களை பாதுகாப்பற்ற நிலைக்குள் கொண்டு செல்கிறார்கள். தினந்தோறும் நீராடவும், தங்கள் கைகளைக் கழுவி சுத்தமாயிருக்கவும் நீங்கள் மற்றவர்களை வலியுறுத்துவது உரிமை மீறல் அல்ல. பணியிலும், உடற்பயிற்சியிலும் ஒருவர் அழுக்காவது தவிர்க்க முடியாதது. அதன் பின் தன்னை சுத்தமாக்குவதும் அவசியமானது.

1-3 பற்களை பாதுகாத்திடுங்கள்.

ஒவ்வொரு வேளை உணவிற்குப் பின்னும் ஒருவர் பல் துலக்குவாரானால் அவருக்கு பல் வியாதியே வராது என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு முறையும் சாப்பிட்ட பின்பு பல் துலக்குவதோ அல்லது கூவிங்கம் மெல்லுவதோ, பல் வியாதிகள் மற்றும் வாய் துர்நாற்றப் பிரச்சனைகளிலிருந்து ஒருவரை வெகுவாகப் பாதுகாக்கும். பற்களைப் பாதுகாக்க மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள்.

1-4 சமச்சீர் உணவருந்துங்கள்.

போதிய அளவில், சரியான உணவுகளை உண்ணாதவர்கள் உங்களுக்கும், தங்களுக்கும் அதிகப் பிரயோஜனமாக இருக்கமாட்டார்கள். அவர்களுக்குப் போதுமான பலம் இருக்காது. எளிதில் எரிச்சல் அடைவார்கள். எளிதில் நோய்வாய்ப்படுவார்கள். சமச்சீர் உணவருந்துதல் என்பது விஷேசமான உணவுகளை உண்ண வேண்டுமென்பதல்ல. ஊட்டச் சத்து நிறைந்த உணவுகளை வழக்கமாக

உட்கொள்ளுவதாகும்.

1-5 ஓய்வெடுங்கள்.

வாழ்வின் பல கட்டங்களில், போதிய தூக்கமின்றி உழைக்க வேண்டிய நிலை வருகிறது. தொடர்ச்சியாக போதிய ஓய்வின்றி ஒருவர் உழைப்பாரானால் அவர் மற்றவர்களுக்கு பாரமாய் மாறக்கூடும். களைப்படைந்த மக்கள் விழிப்புள்ளவர்களாய் இருப்பதில்லை. அவர்கள் தவறு செய்யக் கூடும். அவர்களுக்கு விபத்துக்கள் நேரிடும். வேலையில் அவர்களுடைய பூரண ஒத்துழைப்பு உங்களுக்குத் தேவைப்படும் சமயத்தில், முழு வேலைப் பளுவையும் உங்கள் மேல் வைக்குமளவு சோர்ந்து விடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களை ஆபத்துகளுக்கு உள்ளாக்குகிறார்கள். தேவையான ஓய்வு எடுக்காதவர்களை, போதுமான ஓய்வு எடுக்க வலியுறுத்துங்கள்.

2. வரம்பு[5] மீறாதீர்

2-1. கேடு விளைவிக்கும் போதை மருந்துகளை உட்கொள்ளாதீர்.

போதைப் பொருட்களை உபயோகிப்போர் தங்களைச் சுற்றியிருக்கும் நிஜ உலகைக் காண்பதில்லை. உண்மையில், அவர்கள் இந்த உலகில் இருப்பதில்லை. சாலைகளில், தற்செயலான தொடர்புகளில், வீடுகளில் அவர்கள் உங்களுக்கு மிக ஆபத்தானவர்களாக மாறமுடியும். போதையிலிருப்போர் தாங்கள் அதிக "உற்சாகத்துடன்", "செயல்திறன்" பெருகி, "மகிழ்ச்சியுடன்" இருப்பதாக தப்பெண்ணம் கொள்ளுகின்றனர். இவ்வெண்ணங்கள் அவர்களது மனமயக்கத்தின் விளைவே. நாளடைவில் போதைப்பழக்கம் அவர்களை சரீரத்திலும் சிதைத்துவிடும். மக்களிடையே காணப்படும் போதைப் பழக்கங்களுக்கு எதிர்ப்பு தெரிவியுங்கள். அதில் சிக்கிக் கொண்டோர் அதிலிருந்து விடுபடத் தேவையான உதவிகளை நாட உற்சாகப்படுத்துங்கள்.

2-2 போதைக்காக மது அருந்தாதீர்.

மது அருந்தியவர்கள் விழிப்புடன் இருப்பதில்லை. மது அருந்தியதால் தாங்கள் அதிக விழிப்புடன் இருப்பதாக அவர்கள் கருதினாலும், நடைமுறையில் விரைந்து செயல்படக் கூடியத் தன்மை அவர்களில் கெடுகிறது. மதுவில் சில மருத்துவ பலன்கள் உண்டு என்பதை மது அருந்துவோர் மது அருந்துவதற்கு ஒரு சாக்குப்போக்காக உபயோகிக்கின்றனர். நீங்கள் பயணம் செய்யும் வாகனத்தையோ, விமானத்தையோ மது அருந்தியவர்கள் ஓட்ட அனுமதிக்காதீர். குடிப்பழக்கம் பல வழிகளில் உயிர்களை வேட்டையாடும். சிறிதளவு மது உங்களுக்கு சந்தோசத்தை கொடுக்கலாம். ஆனால் மதுவின் அளவு நாளடைவில் அதிகரித்து துக்கத்திலும் மரணத்திலும் கொண்டுபோய் நிறுத்த இடங்கொடாதீர். ஆதலால் மது அருந்துவது குறித்து மக்களை அதைரியப்படுத்துங்கள்[6].

மேற்கண்ட உண்மைகளை ஒருவர் கைக்கொள்ளும்போது சரீர வாழ்க்கையை சிறப்பாக அனுபவிக்கக் கூடியவராகிறார்.

5. வரம்பு: அளவு மீறாமை, அளவுமீறிய செயல் செய்யாமை, ஆசைகளை அடக்குதல், தடைசெய்யவும்,

தயக்கங்காட்டவும் தவிர்த்தல்.
6. அதைரியம்: தடுத்து நிறுத்து அல்லது ஊக்கம் குறையச் செய்.

3. வரம்பு மீறிய பாலுறவு7 தவிர்ப்பீர்

உடலுறவு மூலம் மனித இனம் எதிர்காலத்திற்குள் தன்னை எடுத்துச் செல்லுகிறது. உடலுறவின் மூலம் குழந்தைகளும், குடும்பங்களும் உருவாகின்றன. உடலுறவில் அதிக இன்பமும், மகிழ்ச்சியும் கிடைக்கிறது. இனம் அழியாமல் பாதுகாக்க இயற்கையானது உடலுறவில் அதிக இன்பத்தை வைத்திருக்கிறது. உடலுறவை தவறாக உபயோகித்தலும், துர்ப்பிரயோகம் செய்தலும் பெரும் தண்டனைகளையும் உபாதைகளையும் கொண்டு வருகின்றன. கடும் தண்டனைகள் உடலுறவு விதிமீறல்களைத் தொடரவேண்டும் என்றும் இயற்கை அமைத்திருக்கிறது.

3-1 உங்கள் வாழ்க்கைத் துணைவருக்கு உண்மையாய் இருங்கள்.

ஒருவருடைய வாழ்க்கைத் துணைவரின் துரோகம் அவருடைய வாழ்நாளை வெகுவாகப் பாதிக்கிறது.
கணவன் மனைவியின் துரோகத்தினால் மனித உணர்வுகள்
கொந்தளிக்கின்றன. அதனால் உண்டாகும் சம்பவங்களின் பயங்கர விளைவுகள், வரலாற்றிலும் பத்திரிகைகளிலும் திரளாகக் காணப்படுகின்றன. துரோகத்தின் பின் விளைவுகளில் "குற்றஉணர்வு" ஒரு சிறிய தீமையே. பொங்கும் எரிச்சலும், பழிவாங்குதலும் விளையும் பெரும் தீமைகள். அவை எப்பொழுது கனன்று எழுந்து, பொங்கி வழியும் என்று ஒருவரும் கணக்கிட முடியாது. "நவீன காலத்தவன்", "முன் நடந்தவைகள் சிந்தையை ஆக்கிரமிக்க அனுமதிக்காதவன்", "எல்லாவற்றையும் அனுசரித்து நடப்பவன்" என்று ஒருவர் கூறும் நியாயங்கள் மிகச் சரியாகப் பேசுவது போல் தோன்றலாம். ஆனால், சீரழிந்த வாழ்க்கைகள் சீரடைய அவை உதவமாட்டாது. முதுகில் சொருகப்பட்ட கூர்மையான கத்தியின் வேதனைக்கும், நீராகாரத்தில் கலந்து கொடுக்கப்பட்ட கண்ணாடித் துகள்கள் வயிற்றில் உண்டாக்கும் வேதனைக்கும், இக்கொடுஞ் செயல்களை செய்தவனுக்கு உண்டாகும் "குற்ற உணர்வு வேதனை" எந்த அளவிலும் இணையாகாது.

7. வரம்பு மீறிய பாலுறவு: பலர்பால்உறவு, பல பேருடனான அலட்சிய உடலுறவு பழக்கங்கள்.

பாலுறவுத் துரோகங்களினால் பிரச்சனைக்குள்ளாகும் மற்றும் ஒரு இடம் ஒருவரது உடல் ஆரோக்கியம். உங்கள் துணைவர் உங்களுக்கு உண்மையாயிருக்க நீங்கள் எதிர்பாராவிட்டால் கொடிய நோய்கள் உங்களுக்கு வருவதற்கான வாசல்களைத் திறந்து வைக்கிறீர்கள். உடலுறவுத் துரோகங்களினால் உண்டாகும் பால்வினை நோய்கள் கட்டுக்குள் இருக்கின்றன என்று முன் சென்ற நாட்களில் அறிவிக்கப்பட்டது. ஒரு வேளை அக்கூற்று எப்படிப்பட்டதாயினும், இப்பொழுது பால்வினை நோய்கள் நிச்சயமாக கைகளை விட்டு கட்டுமீறிப் போய் விட்டன. குணப்படுத்த முடியாத, நிச்சயமாக மரணத்தில் முடியும் பால்வினை நோய்களின் வகைகள் இப்பொழுது உலகில் காணப்படுகின்றன.

தாறுமாறான உடலுறவு வாழ்க்கையினால் உண்டாகும் பிரச்சனைகள் புதிதல்ல. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவில் சக்தி வாய்ந்த மதமாகக் காணப்பட்ட புத்தமதம் பின்பு அடியோடு அழிந்து போயிற்று. புத்த மடங்களில் காணப்பட்ட தவறான உடலுறவு தீயொழுக்கமே அதன் வீழ்ச்சிக்குக் காரணம் என புத்தமதத்தின் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். தற்காலத்திலும் தொழில் அல்லது வேறு நிறுவனங்களில் பாலுறவுத் தீயொழுக்கம் மேலோங்கும் போது, அந்நிறுவனங்கள் தோல்வியடைவதைக் காண முடிகிறது. பாலுறவு துரோகத்தை நியாயப்படுத்த கணவன் மனைவியர் எத்தகைய நவீன கருத்துகளை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டாலும், துரோகத்தினால் குடும்பங்கள் சுக்கு நூறாய் நொறுங்கிப் போகின்றன என்பதே உண்மை.

ஒரு நொடி சபல அவஸ்தை ஆயுட்காலத்தின் துயரமாக மாறிப்போகும். உங்களைச் சுற்றியிருப்போர் மனதில் இக்கருத்துகளைப் பதியச் செய்யுங்கள்; உங்கள் உடல் ஆரோக்கியத்தையும் இன்பத்தையும் பாதுகாத்திடுங்கள்.

மகிழ்ச்சி, சந்தோசம் அடைவதற்கான வழியில் பாலுறவும்
பெரும் பங்கு வகிக்கிறது. உண்மையுடனும்
ஒழுங்குடனும் நடந்து கொண்டால்
பாலுறவில் தவறேதும் இல்லை.

4. பிள்ளைகளை நேசித்து அவர்களுக்கு உதவுங்கள்

இன்றைய குழந்தைகளே நாளைய உலகின் பண்பாடு ஆகிறார்கள். தற்காலத்தில், குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவது என்பது புலி வாலை பிடித்ததற்குச் சமமானதாகக் காணப்படுகிறது. குழந்தைகளால் தாங்கள் இருக்கும் சூழ்நிலைகளைக்[8] கையாள முடிவதில்லை. அதற்குத் தேவையான திறமைகளும் ஆதாரங்களும் அவர்களிடம் இல்லை. அத்திறமைகளையும் ஆதாரங்களையும் பெற்றிட குழந்தைகளுக்குப் பெற்றோரின் அன்பும், உதவியும் தேவை.

குழந்தை வளர்ப்பு என்பது விவாதத்திற்கு மேற்பட்ட கருகலான விசயமாக உள்ளது. உலகில் உள்ள பெற்றோரின் எண்ணிக்கைக்கு சமமாக குழந்தைகளை வளர்ப்பது எப்படி அல்லது எப்படி வளர்க்கக் கூடாது என்ற வழிமுறைக் கொள்கைகளின் எண்ணிக்கையும் உள்ளது எனலாம். கோட்பாடுகள் எத்தனையாயிருந்தாலும் குழந்தை வளர்ப்பில் ஒருவர் தவறு செய்யும்போது பெரிய துயரங்கள் விளையக் கூடும். ஏன், தவறான குழந்தை வளர்ப்பினால் ஒருவர் தனது வயோதிப நாட்களையே துயரமுள்ளதாக்கிக் கொள்ளக் கூடும்.

தாங்கள் வளர்க்கப்பட்ட விதத்திலே, தங்கள் குழந்தைகளையும் சிலர் வளர்க்க முயல்கிறார்கள். இதற்கு நேர்மாறாக, குழந்தைகள் தானாகவே வளர அனுமதிக்க வேண்டும் என்ற கொள்கையை சிலர் கொண்டுள்ளனர். இக்கொள்கைகளில் எதுவும் வெற்றிக்கு உத்தரவாதம் தருவதில்லை. கடைசியாக ஒரு வளர்ப்பு முறை, பொருண்மைக் கொள்கை[9] அடிப்படையில் உருவானது. ஒரு இனம் அடைந்திருக்கும் பரிணாம[10] வளர்ச்சியின் அளவுக்கு இணையாக, அவ்வின குழந்தைகளின் வளர்ச்சி தானாக அமையும் என்பதே அதன் கருத்து. மாயா ஜால வித்தைகள் விளக்கப்படாமல் நடப்பது போன்று ஒரு இனத்தைச் சேர்ந்த குழந்தைகளின் "நரம்புகள்" வயதிற்கேற்ற "முதிர்ச்சி" அடைந்து முடிவில் ஒழுங்கு நெறிகளைக் கைக்கொண்டு ஒழுக்கமாக[11] நடக்கும் ஒரு மனிதனாக மாறும் என்று இக்கருத்து கூறுகிறது. இம்மாற்றம் அக்குழந்தையில் எவ்விதம் உருவாகிறது என்பதை இக்கொள்கை அறிவிக்கத் தவறுகிறது.

8. சூழ்நிலை: ஒருவருடைய சுற்றுப்புற சூழ்நிலை, ஒருவரை சுற்றியுள்ள பொருட்கள், ஒருவர் வாழும் இடம், உயிர்வாழ் இனங்கள், பொருட்கள், அருகிலோ தூரத்திலோ
9. பொருண்மைக் கொள்கை: ஜடப்பொருள் மாத்திரம் நிலைத்திருக்கிறது என்ற கருத்து.
10. பரிணாமம்: திட்டமிடப்பட்டு சிருஷ்டிக்கப்படாமல் சிறிய உயிரினங்களிலிருந்து தாவரங்களும், மிருகங்களும்

உருவானவை என்ற மிகப்பழமையான கருத்து
11. ஒழுக்கம்: நடத்தையில் நல்லது கெட்டதை நிதானித்தல்; அவ்வறிவின் அடிப்படையில் நடத்தல்.

ஒரு இனத்தில் காணப்படும் குற்றவாளிகளைக் கணக்கில் கொண்டு அக்குற்றவாளிகளின் நரம்புகள் தானாக முதிர்ச்சியடையாமல் போனது எப்படி என்று கேட்கும் போது, இக்கொள்கை தவறென எளிதில் காட்டமுடியும். குழந்தைகளை வளர்க்க ஏதும் செய்யாமல் அக்குழந்தைகளின் வளர்ச்சியில் பெருமையடையும் சோம்பேறித்தனமான கொள்கையாகும். நாளைய நல் சமுதாயத்தின் நலத்திலும், எதிர்காலத்திலும், உங்கள் வயோதிப காலத்தின் நலன்களிலும் இக்கொள்கை அக்கறை காட்டவில்லை.

ஒரு குழந்தை என்பது எழுதப்படாத சிறிய கரும்பலகை போன்றது. அதில் தவறானவற்றை எழுதினால் அது தவறானவற்றைத்தான் காட்டும். ஜடப் பொருளான ஒரு கரும்பலகையைப்போலல்லாமல், குழந்தை தானும் எழுத ஆரம்பிக்கிறது. ஏற்கெனவே எழுதப்பட்டிருந்தைப் போலவே தானும் எழுதத் தலைப்படுகிறது. இவ்வளர்ப்புப் பிரச்சனை, மனநலம் குன்றிப் பிறக்கும் குழந்தைகளில் அதிக வலுவடைகிறது. இன்றைய நாட்களில் குழந்தைகள் பிறக்கும் போதே போதைக்கு அடிமைப்பட்டவர்களாய்ப் பிறப்பது இன்னும் அதிகக் கொடுமை. ஆனாலும் இத்தகைய பிரச்சனைகளுடன் பிறக்கும் குழந்தைகள் மிகக் குறைவே. பெரும்பான்மையான குழந்தைகள் மிகச் சிறந்த மனிதர்களாய் வளர்க்கப்படக் கூடிய தன்மையுடனேயே பிறக்கின்றனர்.

அதிகமான விளையாட்டுப் பொம்மைகளைக் கொடுத்து பிள்ளைகளின் ஒத்துழைப்பை "வாங்குவதும்", அவர்களை நெருக்கித் தொடர்ந்து பாதுகாப்பதும் விபரீதமான விளைவுகளில் கொண்டு போய் விடக்கூடும்.

தனது குழந்தை இவ்வுலகில் என்னவாக மாற ஒருவர் விரும்புகிறார் என்பதை தன் மனதில் முதலாவது நிர்ணயிக்க வேண்டும். அவருடைய விருப்பம் கீழ்க்கண்ட உண்மைகளை கருத்தில் கொண்டு அமைய வேண்டும். அ) குழந்தையின் பரம்பரை குணநலன்கள் மற்றும் சாத்தியத் திறமை. ஆ) தான் என்னவாக வேண்டும் என்ற குழந்தையின் விருப்பம். இ) அக்குழந்தை என்னவாக மாற வேண்டும் என்ற பெற்றோரின் விருப்பம். ஈ) அம்மாற்றத்திற்கு அத்தியாவசியமான ஆதாரங்கள்.

மேற்சொன்ன காரியங்கள் எல்லாம் இருந்தும், ஒரு குழந்தை தன்மேல் சார்ந்து கொள்ளப் பழகாமலும், ஒழுக்கத்தில் தேர்ச்சியடையாமலும் இருந்தால் சிறப்பாக வாழ்தல் இயலாது. தனக்கும் மற்றவர்களுக்கும் ஒரு பாரமாக மாறுவது அக்குழந்தையின் முடிவாக அமையும்.

தடைகளைத் தாண்டி வெற்றியுடன் வாழும் வழியில் ஒரு குழந்தை தன் கால்களை ஊன்றி சுயமாய் நிற்கப் பழகாவிட்டால், பெற்றோரின் பாசம் எவ்வளவு பெரிதாயிருந்தாலும், அக்குழந்தையால் இவ்வுலகில் வெற்றி வாழ்க்கை வாழ இயலாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். குழந்தைகள் தங்களுடைய வாழ்வில் தோல்வியடைவது ஒரு விபத்தல்ல. குழந்தைகளைத் தோல்வியடையச் செய்வதற்கு ஏற்றாற்போல் தற்கால சமுதாயம் அமைந்துள்ளது.

இப்புத்தகத்தில் அடங்கியுள்ள கருத்துகளைக்[12] கைக்கொள்வதற்கு ஒரு குழந்தையின் விருப்பத்தையும், புரிந்து கொள்ளுதலையும் நீங்கள் பெறக் கூடுமானால் குழந்தை வளர்ப்பில் அது உங்களுக்கு பெரிய அளவில் உதவியாக அமையும்.

நடைமுறை சாத்தியமான வளர்ப்பு வழி ஒன்று உண்டென்றால் அது குழந்தைக்கு நண்பராக இருப்பதுதான். ஒரு குழந்தைக்கு நண்பர்கள் வேண்டுவது மிகவும் உண்மையான காரியமாகும். ஒரு குழந்தையின் பிரச்சனை என்ன என்பதைக் கண்டுபிடியுங்கள். அப்பிரச்சனையைத் தீர்க்க அக்குழந்தை முயற்சிக்கும் தீர்வை முற்றிலும் நிராகரியாமல் அப்பிரச்சனையைத் தீர்க்க உதவி செய்யுங்கள். அவர்களைக் கூர்ந்து கவனியுங்கள். இக்காரியத்தை நீங்கள் உங்கள் கைக் குழந்தைகளுக்கும் செய்ய வேண்டும். தங்களுடைய வாழ்க்கைக் காரியங்களைப் பற்றி, குழந்தைகள் உங்களிடம் பேசுவதைக் கவனியுங்கள். அவர்கள் உங்களுக்கு உதவ அனுமதியுங்கள். இல்லாவிடில் குழந்தைகள் நன்றிக்கடன்[13] உணர்வுகளை அடக்கி அச்சுமையினால் பாரமடைவார்கள்.

மகிழ்ச்சிக்கு வழி என்ற இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளை புரிந்து கொள்ளும் ஆற்றலையும், விருப்பத்தையும் குழந்தைகளிடம் உண்டாக்கி அவற்றை கைக்கொள்ளச் செய்தால் குழந்தைகளுடைய வாழ்வில் பெரும் மலர்ச்சி ஏற்படும். அதன் விளைவாக உங்களுடைய வாழ்க்கையும் வெற்றியுடன் தொடரும்.

அன்பு காட்டப்படாத ஒரு குழந்தை வெற்றிகரமாக செயல்படுவதில்லை என்பது உண்மை. தங்களுக்குக் காட்டப்பட்ட அன்பற்ற தன்மையை, அன்பு காட்டாதவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க அநேகக் குழந்தைகள் காத்திருக்கின்றனர்.

குழந்தைப் பருவம் முதல் வாலிபனாகும் வரை பிள்ளைகளுக்கு பாசத்துடன் உதவி செய்வது மகிழ்ச்சிக்கு வழியாகும்.

12. கருத்துக்கள்: நல்லொழுக்க விதிகள்

5. உங்கள் பெற்றோருக்கு உதவி செய்யுங்கள், அவர்களை கனப்படுத்துங்கள்[14]

ஒரு குழந்தையின் கண்ணோட்டத்தில் பெற்றோர்கள் சில சமயங்களில் புரிந்து கொள்ளப்படக் கூடாதவர்களாய் இருக்கிறார்கள். இரு தலைமுறைகளுக்கிடையே வேறுபாடுகள் இருக்கின்றன. உண்மையில் இவ்வேறுபாடுகள் தலைமுறைகளுக்கிடையே உள்ள புரிந்து கொள்ளுதலுக்குக் தடைகள் அல்ல. தனக்கு செயல்திறன் குறைவு என்று ஒருவர் உணரும்போது ஏமாற்றுதலையும், பொய்யையும் கையாள அவர் சோதிக்கப்படுகிறார். இத்தகைய சோதனைகளே தலைமுறைகளுக்கிடையேயான புரிந்து கொள்ளுதலுக்குத் தடையாக உள்ளன.

குழந்தைகள் தங்கள் பெற்றோருடனான கருத்து வேறுபாடுகளைக் களைந்து சமரசமாக இயலும் . வாக்குவாதங்கள் வெடிக்கும் முன் பிரச்சனையைக் குறித்து ஒருவர் மற்றவரிடம் அமைதியாகப் பேச முயற்சிக்கலாம். குழந்தையானது நேர்மையுடன், ஒளிவு மறைவில்லாமல் பேசும் குணம் உடையதாயிருந்தால் ஒரு வேண்டுகோளிலேயே பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்கும். அநேக சமயங்களில் இருபேரும் புரிந்து கொண்டு சம்மதிக்கக் கூடிய சமரசம்[15] சாத்தியமாகக் கூடியதுதான். மற்றவர்களுடன் எல்லா வேளைகளிலும் இசைந்து நடப்பது எளிதான காரியம் இல்லை என்றாலும், ஒருவர் அதற்காக முயற்சி செய்வது அவசியம்.

தங்கள் குழந்தைகளுக்கு நல்லது என்று தாங்கள் நம்புகிறதை அவர்களுக்குச் செய்வதற்குக் கொள்ளும் வலுவான ஆர்வத்தினாலேயே எல்லா நேரங்களிலும் பெற்றோர்கள் செயல்படுகிறார்கள் என்பதை அலட்சியப்படுத்த முடியாது.

குழந்தைகள் தங்களை நல்ல வளர்ப்பில் வளர்த்த பெற்றோருக்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறார்கள். சில பெற்றோர் மிகவும் சுதந்திர எண்ணம் கொண்டிருந்து பிள்ளைகள் செலுத்த வேண்டிய நன்றிக் கடனில் எதையும் எதிர்பாராமல் இருக்கலாம். அப்படி இருந்தும் பிள்ளைகள் தங்கள் பெற்றோரைப் பராமரிக்க வேண்டிய அநேக சமயங்கள், வாழ்க்கையில் பெற்றோருக்கு நேரிடுகிறது என்பதே உண்மை.

14. கனப்படுத்துதல்: மரியாதை காண்பித்தல்; ஒருவருக்கு மதிப்பளித்தல்
15. சமரசம்: வேறுபாடுகளில் சிலவற்றை ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தும் மற்றவற்றை

நிலைப்படுத்தியும் வந்தடையும் ஒருமித்த உடன்படிக்கையின் ஏற்பாடு.

பெற்றோர் தங்களை வளர்க்க ஒன்றும் செய்யாதவர்களாயிருந்தாலும் தன்னைப் பெற்றவர்கள் அவர்கள் தான் என்பதை ஒருவர் நினைக்கவேண்டும். அதினிமித்தம் காரண காரியங்கள் எத்தனை எதிராக இருந்தாலும், ஒருவர் தன் பெற்றோரை கனப்படுத்தி ஆதரிக்கவேண்டும்.

தன்னைப் பெற்றவர்களிடம் அல்லது தன்னை வளர்த்தவர்களிடம் நல்லுறவில் நிலைத்திருத்தல் மகிழ்ச்சிக்கான வழியின் ஒரு அங்கமாகும்.

6. நல்மாதிரியாகத்[16] திகழுங்கள்

ஒரு மனிதனின் தாக்கத்திற்கு[17] உட்படுபவர்கள் அநேகர். தாக்கம்[18] நன்மையானதாகவோ அல்லது தீயதாகவோ இருக்கக் கூடும்.

கூறப்பட்டுள்ள பரிந்துரைகளைக் கடைபிடித்து தன் வாழ்க்கையை ஒருவர் நடத்துவாரானால் அவர் நல்ல மாதிரியை மற்றவர்களுக்கு முன் வைப்பவராவார். அவரைப் பற்றிய கருத்து அவரைச் சுற்றிலும் எதுவாக இருப்பினும் அவரைச் சுற்றியுள்ளவர்கள் அவருடைய மாதிரியினால் நன்மைக்கேதுவாக தாக்கமடையாமல் இருக்க இயலாது.

உங்கள் நல்மாதிரியின் தாக்கம் தங்களுடைய சுயநல வழிகளின் இலட்சியங்களுக்கு இடையூறாக இருப்பதாக நம்புவதாலேயே சிலர் உங்களை அதைரியப்படுத்த முயலுகிறார்கள். ஆனாலும் தங்கள் இருதயத்தின் ஆழத்திலே உங்கள் நல் மாதிரியை மதிக்கிறவர்களாயிருப்பார்கள்.

உங்கள் தாக்கத்தினால் நாளடைவில் உங்களைச் சுற்றியுள்ளவர்கள் நன்மைக் கேதுவான மாற்றமடைவதினால் கிடைக்கும் வேறு பல நன்மைகளுடன், உங்கள் வாழ்க்கைக்கு இருக்கக் கூடிய அச்சுறுத்தல்களும் குறைகின்றன.
இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ள அறிவுரைகளை எடுத்துச் சொல்வதுடன் நல்ல மாதிரியை முன் வைப்பதால், நீங்கள் மற்றவர்களிடத்தில் ஏற்படுத்தக் கூடிய மாற்றங்களைக் குறைத்து மதிப்பிடாதீர்கள்.

மற்றவர் முன் நல்மாதிரியைக் காண்பித்தல்
மகிழ்ச்சிக்கு அவசியமான வழியாகும்.

16. மாதிரி: பின்பற்றவோ அல்லது நகல் எடுக்கவோ தகுதியான ஆள் அல்லது பொருள். ஒரு வடிவமைப்பு, ஒரு மாதிரி.
17. தாக்கம்: தாக்கத்தை உண்டாக்கும் செயல்.
18. தாக்கம்: தாக்க செயலின் விளைவு, பாதிப்பு.

7. உண்மையின்[19] அடிப்படையில் வாழுங்கள்

பொய்யான தகவல்களும், தவறான விவரங்களும் ஒருவரை முட்டாள் தனமான தவறுகளைச் செய்ய வைக்கின்றன. மேலும், ஒருவர் சரியான விவரங்கள் பெறுவதையும் தடுத்து விடுகின்றன.

சரியான விவரங்கள் ஒருவருக்குக் கிடைத்தால் மாத்திரமே வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சனைகளை அவர் தீர்க்க இயலும்.

ஒருவரைச் சுற்றியுள்ளவர்கள் பொய்யான தகவல்களை அவருக்குத் தரும்போது அவற்றின் அடிப்படையில் தவறான செயல்களைச் செய்ய அவர் வழிநடத்தப்படுகிறார். இடர் அற்ற வாழ்க்கை வாழக் கூடிய வாய்ப்பு அவருக்குக் குறைகிறது.

தவறான தகவல்கள் பல்வேறு தளங்களிலிருந்து வரக்கூடும். கற்கும் கல்வி, வாழும் சமுதாயம், வளர்ந்த தொழில்துறை ஆகியவை தவறான தகவல்களை ஒருவருக்கு அளிக்கக் கூடிய சில தளங்கள்.

தங்கள் நோக்கத்தை நிறைவேற்ற உதவும் தகவல்களை பிறர் நம்பவேண்டும் என்று அநேகர் விரும்புகின்றனர்.

ஆனால் உங்களுக்கு உண்மையாகத் தோன்றுகிறது எதுவோ அதுவே உண்மையாகும்.

உங்கள் மேல் தங்கள் தகவல்களைத் திணித்து, அவற்றை நீங்கள் நம்ப வேண்டும் என்று கட்டளையிட, யாருக்கும் உரிமையில்லை. உங்களுக்கு உண்மையாகத் தோன்றாதது எதுவோ அது உண்மை அல்ல.

காரியங்களை அலசி ஆராயுங்கள். உங்களுக்கு உண்மையாய்த் தோன்றுகிறதை ஏற்றுக் கொள்ளுங்கள். மற்றவற்றைத் தள்ளுங்கள். கலங்கிய பொய்களில்[20] அமிழ்ந்து வாழ முயற்சிப்பதைவிட துக்ககரமானது வேறு ஒன்றுமில்லை.

---

19. உண்மை: கூர்ந்து அறிந்த நிகழ்வுகளுடன் இசைந்த நிலை. அனைத்து தகவல்களையும் விருப்பு, அதிகாரம், காழ்ப்பு இனறி சீதாக்கி பின் கிடைக்கும் கணிப்புகள். தர்க்கமற்ற ஆதாரங்களின் அடிப்படையிலான முடிவு.
20. பொய்கள்: பொய்யான செய்திகள் அல்லது அறிந்தே தவறான தகவல்களை சரியென்று சொல்வது. கபடதவறானஎண்ணத்தை உருவாக்க அல்லது ஏமாற்ற திட்டமிட்ட ஏதுக்கள்.

7-1 தீமை தரும் பொய்களைச் சொல்லாதீர்.

பயம், தீமை செய்யும் ஆவல், பொறாமை ஆகியவற்றின் கலவையாக, கெடுதல் உண்டாக்கும் பொய்கள் காணப்படுகின்றன. நம்பிக்கை இழந்தவர்களுடைய செயல்களைச் செய்வதற்கு இப்பொய்கள் மனிதர்களை விரட்டக் கூடும். இப்பொய்கள் வாழ்க்கைகளை அழிக்க முடியும். சொல்பவரும், பாதிக்கப்பட்டவரும் சேர்ந்து தனக்குள் விழக்கூடிய விதத்தில் செயல்படும் ஒரு வகைக் கண்ணியை இப்பொய்கள் உருவாக்குகின்றன.

தனிப்பட்டவர்களுக்கிடையிலான உறவிலும், சமுதாய அளவில் நிலவும் உறவுகளிலும் இப்பொய்கள் புயல் வீசச் செய்கின்றன. அநேக யுத்தங்கள் இத்தகைய பொய்களினால் தூண்டப்பட்டவைதான்.

பொய்களை அடையாளங் காண ஒவ்வொருவரும் பழக வேண்டும். அடையாளங்கண்டு அவற்றை தகாதவை எனத் தள்ள வேண்டும்.

7-2 பொய்சாட்சி சொல்லாதிருங்கள்.

"உண்மைக்குப் புறம்பான தகவல்களை" உண்மையானவை என்று சத்தியம் செய்வதற்கும், நடக்காத சம்பவங்களை நடந்தவை என்றும் நடந்தவற்றை நடக்கவில்லை என்றும் பொய்சாட்சி சொல்வதற்கு சட்டத்தில் போதுமான தண்டனைக்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. செய்யப்பட்ட "சத்தியப் பிரமாணத்திற்கு விரோதமாகப் பொய் சொல்லுதல்" என்றழைக்கப்படும் இக்குற்றம் கடுமையான தண்டனைக்குரியது.

உண்மையின் வழியைப் பின்பற்றி தான்
மகிழ்ச்சியின் வழி அமைந்துள்ளது.

8. கொலை[21] செய்யாதீர்

மிகப் பழங்காலம் முதல் தற்காலம் வரை பெரும்பாலான இனங்கள் மனிதக் கொலையைத் தடை செய்திருப்பதுடன் கடுந்தண்டனையும் வழங்கி வந்திருக்கிறது. "கொலை செய்யாதிருப்பாயாக" என்ற அனைத்து உயிர் கொலைகளையும் பொருளாக உள்ளடக்கிய வாசகம், மற்றொரு மொழி பெயர்ப்பில் "மனிதர்களைக் கொலை செய்யாதிருப்பாயாக" என மாற்றம் கண்டுள்ளது.

கொலை செய்தல் என்ற பொதுவான வார்த்தைக்கும், மனிதக் கொலை என்ற பொருள் கொண்ட வார்த்தைக்கும் அதிக வேறுபாடு உண்டு. எவ்வுயிர்களையும் சாகடிப்பது தடை செய்யப்பட்டால், குழந்தையைக் கொட்டுவதற்கு சீறி நிற்கும் பாம்பை சாகடிப்பதும் சட்ட விரோத செயலாகி விடும். மாமிசம் உண்ணுவது சட்ட விரோதமாகி, ஜாதிகளை சைவ உணவில் வாழச் செய்துவிடும். அனைத்து உயிர் கொலைகளும் தடை செய்யப்படுமானால் உண்டாகும் தர்ம சங்கடங்களை நீங்கள் உணரமுடியும் என்று நான் நிச்சயித்திருக்கிறேன்.

"மனிதக் கொலை" என்பது முற்றிலும் வித்தியாசமானது. "சதி சர்ப்பனைகளுடன் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்களை, மற்றொரு மனிதன் சட்ட விரோதமாக சாகடிப்பது மனிதக் கொலையாகும்." பயங்கரமான ஆயுதங்கள் பெருகிவிட்ட இக்காலத்தில் மனிதக் கொலை மிக எளிதாக செய்யக்கூடியது என்பதை நாம் அறிவோம்.

தன்போக்கில், காரணமின்றி எவரையும் கொலை செய்யும் மனிதன் வாழும் சமுதாயத்தில், பயத்துடன், தன் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் வாழ்வது கூடாத காரியம்.

சமுதாயத்தில் மிகக் கடுமையாகத் தடை செய்யப்படுவதும் தண்டிக்கப்படுவதும் மனிதக் கொலை என்பது மிகச் சரியானதே. மூடர்களும், தீயவரும், பைத்தியங் கொண்டவர்களும் நிஜமான அல்லது கற்பனையான பிரச்சனைகளுக்குத் தீர்வாக மனிதக் கொலைகளைச் செய்கிறார்கள். எவ்விதக் காரணம் இன்றியும் மனிதக் கொலைகள் செய்யப்படுகின்றன.

21. கொலை: தீய நோக்கத்துடன் திட்டமிட்டு சட்ட விரோதமாக ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்களை சாகடித்தல்.

மனித இனத்தை அச்சுறுத்தும் இத்தீமையை அடக்கிக் கையாள உறுதியுடன் செயல்படும் திட்டங்களுக்கு ஆதரவு அளித்து உற்சாகப்படுத்துங்கள். நீங்கள் உயிர் பிழைத்திருப்பது அத்திட்டங்களின் வெற்றியைச் சார்ந்திருக்கிறது.

உங்கள் நண்பர்களையோ, குடும்பத்தாரையோ கொலை செய்வதோ அல்லது நீங்கள் கொலை செய்யப்படுவதோ மகிழ்ச்சிக்கு வழியாகாது.

9. சட்ட விரோத செயல்களைச் செய்யாதீர்

சட்டத்தையும், அரசு விதிகளையும் மீறுதலே சட்ட விரோத செயல்களாகும். ஆட்சியாளர்களும், ஆட்சி மன்றங்களும், நீதிபதிகளும் கூடி சட்டத்தை ஏற்படுத்துகின்றனர். சட்டம், சட்ட விதிகளாக எழுதப்பட்டிருக்கிறது. வளர்ந்த சமுதாயங்களில் இவைகள் அச்சிட்டு வெளியிடப்பட்டு, மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றன. குற்றங்கள் மலிந்து, நலிந்துள்ள சமுதாயங்களில் சட்ட விதிகளை அறிய வழக்கறிஞரை கலந்தாலோசிக்க வேண்டியதுள்ளது. அல்லது சட்டம் சம்பந்தமான விசேஷ படிப்புகளைப் படிக்க வேண்டியதுள்ளது.

"சட்ட விதிகளைப் பற்றிய ஒருவரது அறியாமை, சட்ட விதிகளை மீறுவதற்கான ஒரு நியாயமாக ஏற்கப்படமாட்டாது" என்பதே எல்லா சமுதாயங்களும் கூறும் செய்தி.

சமுதாயத்தின் அங்கமாக உள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பெரியவர்களாயினும், சிறுவர்களாயினும் "சட்ட விரோத செயல்கள்" என்று சமுதாயம் கருதும் செயல்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய பொறுப்பு உள்ளது. தெரிந்தவர்களிடம் கேட்டும், நூலகங்களில் சட்ட அறிவு புத்தகங்களைப் படித்தும் அறிந்து கொள்ளலாம்.

"சட்டவிரோத" செயல் என்பது தனக்குக் கொடுக்கப்படும் சாதாரணமான கட்டளைகளை ஒருவர் மீறுவது அல்ல. உதாரணமாக, "தூங்கப்போ" என்ற கட்டளைக்குக் கீழ்ப்படியாமை சட்ட விரோத செயலன்று. அரசாங்கமும், நீதி மன்றங்களும் தண்டிக்கக்கூடிய செயல்கள் சட்ட விரோத செயல்களாகும். அரசாங்கத்தால் அபராதமோ, சிறைத்தண்டனையோ விதிக்கப்பட்டு பிரச்சாரத்துறையால்[22] அவமானப்படுத்தப்படும்[23] செயல்கள் சட்ட விரோத செயல்கள் ஆகும்.

சிறிய அல்லது பெரிதான சட்ட விரோத செயல்களை ஒருவர் செய்யும் பொழுது அரசாங்கத்தால் பிடிக்கப்படக் கூடிய நிலையில் இருக்கிறார். ஒருவர் பிடிக்கப்பட்டிருக்கிறாரா, பிடிக்கப்படவில்லையா என்பது பெரிய காரியமல்ல. சட்ட விரோத செயலில் ஈடுபட்டதினால் அவர் மனதைரியத்தை இழந்து பலவீனமடைந்து விடுகிறார்.

---

22. பிரச்சாரம்: பிரச்சாரம் செய்யும் ஒரு மனிதர் அல்லது குழு: பொதுவாக உண்மைக்குப் புறம்பாக தனக்கு சாதகமாகவோ மற்றவருக்கு பாதகமாகவோ கருத்துக்களையோ, தகவல்களையோ, வதந்திகளையோ பரப்புதல். விசாரணையில் ஒருவருடைய மரியாதையை கெடுத்து, ஒருவருடைய முக்கியத்துவத்தை குறைத்து, குற்றவாளியாக்கும்படி பத்திரிக்கைகளில் அல்லது வானொலி, தொலைகாட்சிகளில் அவரைப்பற்றி பொய்யான செய்திகளை வெளியிடுதல்.
23. அவமானப்படுதல்: பரிகாசம், பொதுஜன இகழ்ச்சி, கேலி, தீச்சொற்களுக்கு ஆட்படுதல்.

ஏறக்குறைய கனமுள்ள செயல்கள் அனைத்தும், முற்றிலும் சட்டபூர்வமான வழிகளில் செய்யப்படக் கூடும். "சட்டத்திற்குப் புறம்பான" வழி குறுக்கு வழியாகத் தோன்றினாலும், மிக ஆபத்தானதும், அதிக காலவிரயம் ஆகக் கூடியதுமாகும். சட்ட விரோத குறுக்கு வழிகளின் "ஆதாயங்கள்" செயலுக்கு முன் பெரிதாகத் தோன்றினாலும் சட்டத்தை மீறியபின், செய்த தவறுக்குத் தகுதியானதாக அமைவதில்லை.

ஒரு தேசமும், அதன் அரசாங்கமும் சிந்தனையற்ற இயந்திரத்தைப் போல் இயங்குகின்றன. அவை சட்டத்திலும், சட்ட விதிகளினாலுமே நிலை நிற்கின்றன. தன்னுடைய கிளை அமைப்புகள் மூலம் "சட்ட விரோத செயல்கள்" மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளன. சமாதானம் செய்ய இயலாத[24] எதிரியைப் போன்று சட்ட விரோத செயல்கள் மீது அரசாங்கம் கடினமனம்[25] கொண்டு இருக்கிறது. ஒரு சட்டவிரோத செயலின் நியாயத்தையும், அநியாயத்தையும், சட்டங்களும் சட்ட விதிகளும் கணக்கில் கொள்வதில்லை.

சட்டத்தை மட்டுமே நீதி கவனத்தில் கொள்கிறது. உங்களைச் சுற்றியுள்ளவர்கள், "சட்ட விரோத செயல்களைச்" செய்வதாக நீங்கள் உணரவோ கண்டுபிடிக்கவோ செய்தால், அவர்களை எச்சரிக்க உங்களால் இயன்றவற்றை செய்ய வேண்டும். நீங்கள் அவர்களோடு கூட்டு சேராதவர்களாக இருந்தாலும், அவர்களுடைய செயல்கள் நிமித்தம் நீங்களும் துன்பம் அடையக்கூடும். ஒரு நிறுவனத்தின் கணக்கர் பொய்யான கணக்குகளை எழுதுகிறார். அதனால் ஏற்படும் பாதிப்புகளினால் அந்நிறுவனம் நஷ்டமடைந்து மூடுவதினால் நீங்கள் உங்கள் வேலையை இழக்க நேரிடும். இத்தகைய சம்பவங்கள் ஒருவருடைய வாழ்க்கையின் நிச்சயத்தைப் பெரிய அளவில் பாதிக்கக்கூடும்.

---

24. சமாதானம் செய்ய இயலாத: நெஞ்சழுத்தம், கடினமான, தோல்வியை ஏற்றுக்கொள்ள மறுத்தல், இணங்காத தன்மை, உடைக்க முடியாத ஒரு பொருள், தன்நிலை வற்புறுத்துதல், மாற்று கருத்துகளை மறுத்தல், ஒன்றுக்கும் சரண் அடையாமை.

25. கடினமனம்: மனவருத்தமற்ற விட்டுக்கொடுக்காத தன்மை, அடங்காத அமைதிபடுத்தவோ, ஆறுதல்படுத்தவோ, பிரியப்படுத்தவோ இடங்கொடாத தன்மை.

சட்டத்திற்குட்பட்ட எந்த அமைப்பின் உறுப்பினராகவும் நீங்கள் இருக்கலாம். அந்த சட்டங்கள் யாவரும் அறியும்படி தெளிவாகப் பிரசுரிக்கப்படுவதை ஊக்கப்படுத்துங்கள். நீங்கள் அங்கம் வகிக்கிற அமைப்பின் சட்டங்களை தெளிவுபடுத்தி, சுருக்கி, விதிகளாக மாற்றும், சட்டம் மற்றும் அரசியல் சார்ந்த முயற்சிகளுக்கு ஆதரவு அளியுங்கள். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையில் உறுதியாக இருங்கள். மேன்மக்கள் ஆட்சி[26] என்ற கொடுங்கோல் ஆட்சி[27] காலங்களில் இக்கொள்கை உருவானது. மனித சரித்திரத்தில் இக்கொள்கை மிகப் பெரிய சமுக முன்னேற்றமாகும். நாம் அதை ஒரு போதும் மறந்து விடக்கூடாது. குழந்தைகளும், ஜனங்களும் "சட்டபூர்வமான" அல்லது "சட்டத்திற்குப் புறம்பான" செயல்கள் எவையென்பதைக் குறித்த அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுங்கள். "சட்ட விரோத செயல்களை" நீங்கள் அங்கிகரிப்பதில்லை என்பதை ஒரு முகச் சுளிப்பினாலாவது அவர்களுக்கு உணர்த்துங்கள்.

சட்ட விரோத செயல்களைச் செய்தவர்கள், "கண்டுபிடிக்கப்படாமல் இருந்தாலும்" அரசாங்கத்தை நினைத்து பயத்துடன் இருக்கிறார்கள்.

கண்டு பிடிக்கப்படுவோம் என்கிற பயம் மகிழ்ச்சியின் வழியில் சேர்ந்ததல்ல.

26. மேன்மக்களாட்சி: விசேஷ சலுகைகள், அந்தஸ்துகள், பதவிகள் பெற்ற சிலரால் நடத்தப்படும் ஆட்சி; ஆளும் மேன்மக்கள் சிலரே பொதுவான சட்டமாகிறார்; பிறப்பாலோ அந்தஸ்தாலோ மற்றவர்களைவிட மேன்மக்களாகிய ஒரு கூட்டம்; மற்றவர்களுக்கு சட்டங்களை இயற்றி உட்படுத்தி தங்களை சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் என எண்ணுபவர்.
27. கொடுங்கோல் ஆட்சி: கொடூரமான, அநீதியான, எதேச்சதிகாரத்தை நொறுக்குவதற்கு, ஒடுக்குவதற்கு ஏதேச்சதிகாரத்தை வெறுப்புடன் கடுமையாக பிரயோகித்தல்.

10. மக்கள்நல அரசுக்கு ஆதரவு தாரீர்

நீதி நெறிகளைக் குறித்து கவலையற்ற தீயவர்கள், தனிமனிதராகவோ அல்லது குழுக்களாகவோ, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி தங்களது துராசைகளை நிறைவேற்றக் கூடும். சுயநலவாதிகள் அல்லது சுயநலக் குழுக்களின் நன்மைக்காக இயங்கும் ஆட்சி, பொதுஜன சமுதாயத்தின் வாழ்நாளை மிகக் குறுகியதாக மாற்றுகிறது. இவ்வாட்சி தேசத்தில் ஒவ்வொரு பிரஜையின் வாழ்வையும் ஆபத்தில் வைக்கிறது. ஆட்சி செய்பவர்களின் வாழ்க்கையும் கூட அதே ஆபத்தை எதிர்பார்த்தே இருக்கிறது. இத்தகைய ஆட்சிகளால் விளைந்த மரணங்கள் சரித்திரத்தில் ஏராளமாகப் பதிவாகியுள்ளன.

பொதுநல விரோத ஆட்சிகளுக்கு விரோதமான எதிர்ப்புகள் மேலும் வன்முறைகளையே கொண்டுவருகின்றன.

இத்தகைய ஆளுகையில் தன் எதிர்ப்புகளை ஒருவர் எச்சரிக்கையுடன் வெளிப்படுத்த முடியும். இத்தகைய ஆட்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டிய அவசியமில்லை. சட்ட விரோத செயல்களில் ஈடுபடாமலே ஒத்துழைப்பை திரும்பப் பெறுவதால் நல்ல மாற்றங்களை உருவாக்க முடியும். இக்கருத்துகள் எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் போதே, உலகம் முழுவதும் பல ஆட்சிகள் மக்கள் மௌனமாகத் தங்கள் ஒத்துழைப்பை விலக்கியதன் மூலம் தோல்வியடைவதைக் காண முடிகிறது. இவ்வாட்சிகள் ஆபத்தில் இருக்கின்றன. எதிர்பாராது கிளம்பும் எதிர்ப்புக் காற்று இவ்வாட்சிகளை எந்நேரமும் அடித்துச் சென்று விடும்.

அதே சமயம், ஒருவருக்காகவோ அல்லது சுய நல குழுக்களுக்காகவோ அல்லது ஒரு சர்வாதிகாரியின் நலனுக்காகவோ அல்லாமல் குடிமக்கள் அனைவரின் நலனுக்காக கடினமாக உழைக்கும் ஆட்சிக்கு, தங்களால் இயன்ற மட்டும் ஒருவர் ஆதரவு அளிக்க வேண்டும்.

"அரசாட்சி" பற்றிய ஒரு பாடம் இருக்கிறது. பள்ளிகளில், "சமூகவியல்" என்ற பிரிவின் கீழ், தற்கால அரசாங்கங்களின் அமைப்பு முறை பற்றியே பிரதானமாகக் கற்பிக்கப்படுகிறது. ஆனால் உண்மையான செய்தியான "அரசாட்சி முறை" பல்வேறு பாடப் பிரிவுகளின் கீழ் வருகின்றன. அரசியல் பொருளாதாரம், அரசியல் தத்துவம், அரசியல் அதிகாரம் போன்றவை சில பிரிவுகளாகும். "அரசாட்சியின்" முழுஞானம் சுருக்கமாகவும், தொழில் நுட்ப அறிவியலைப் போன்று துல்லியமாக உணரக் கூடியதுமாகவே இருக்கிறது. மக்களுக்கு தொல்லை தராத சிறப்பான அரசாட்சி தங்களுக்கு வேண்டுவோர், அரசாட்சியைப் பற்றிய பாடங்கள் பள்ளிகளில் கற்பிக்கப்பட முயற்சி செய்ய வேண்டும். அதைப் பற்றிய புத்தகங்களையும் படிக்க வேண்டும்.

அரசாட்சி சொற்றொடர்கள் தோற்றமளிப்பது போல அப்பாடங்கள் அவ்வளவு கடினமானவை அல்ல. உண்மையில் மக்களும், மக்கள் மத்தியில் செல்வாக்குள்ள தலைவர்களுமே தங்கள் தேசத்திற்காய் வியர்வை சிந்தி, உழைத்துப் போராடி

இரத்தம் சிந்துபவர்கள். ஒரு அரசாங்கம் இரத்தம் சிந்துவதில்லை. அரசாங்கத்தினால் சிரிக்கக்கூட முடியாது. அரசாங்கம் என்பது மக்கள் கொண்டிருக்கும் ஒரு சிந்தனையே. உயிரோடிருக்கும் தனி மனிதனே உண்மையான அரசாங்கம். நீங்களே அரசாங்கம்.

கொடுங்கோலாட்சியின் அடக்குமுறை மகிழ்ச்சியின் வழியை மறைக்கும் போது பயணம் கடினமாகிறது. அனைத்து மக்களுக்காகவும் அமையப் பெற்று நடத்தப்படும் செங்கோலாட்சியே, மகிழ்ச்சியின் வழியில் பயணத்தை இலகுவாக்குகிறது. இத்தகைய ஆட்சி நம் ஆதரவுக்குத் தகுதி உள்ளது.

11. பண்புள்ள[28] மனிதரைப் புண்படுத்தாதீர்

எல்லா மனிதரும் தீயவர்களே, என வலியுறுத்தும் தீயவர்களின் கூற்றைப் போல் அல்லாமல் அநேக நல்ல மனம் கொண்ட ஆண்களும், பெண்களும் இருக்கிறார்கள். அவர்களில் சிலரை உங்கள் வாழ்வில் சந்திக்க நீங்கள் பாக்கியம் பெற்றிருக்கக்கூடும்.

உண்மையில், நல்லெண்ணம் கொண்ட ஆண்களாலும் பெண்களாலுமே இச் சமுதாயம் தொடர்ந்து முன் செல்கிறது. பொதுத்துறை ஊழியர்கள், மக்கள் மத்தியில் ஆதரவு பெற்ற தலைவர்கள், தங்கள் வேலைகளில் கடமையுடன் செயல்படும் தனியார் துறை ஊழியர்கள் ஆகியோர் நல்லெண்ணம் கொண்ட மனிதர்களில் பெரும்பான்மையோராவார். அப்படியிராத பட்சத்தில் சேவைத் துறையை அவர்கள் உதறி விட்டிருப்பார்கள்.

பண்புள்ள மக்களைத் தாக்குவது எளிது. எனெனில் அம்மக்களுடைய நற்பண்புகள் அவர்களைத் தகுந்த விதமாய் பாதுகாத்துக் கொள்ள தடை செய்கின்றன. ஆனாலும் சமுதாயத்தில் அங்கமாயுள்ள அநேக தனிமனிதரின் நலன்கள் இம்மக்களையே சார்ந்துள்ளன.

வன்முறைக் குற்றவாளிகளும், பிரச்சாரகர்களும்[29], பரபரப்பான செய்திகளால் ஆதாயம் தேடும் செய்தித்துறைகளும், உறுதியான அநுதின உண்மை ஒன்றை மக்கள் மத்தியில் மறைக்க முயல்கின்றன. நல்லெண்ணம் கொண்ட மனிதர்களாலேயே சமுதாயம் இயங்குகிறது; அவர்கள் இல்லாமல் சமுதாயம் இயங்கவே இயலாது என்பதே அவ்வுண்மை. நல்லெண்ணம் கொண்டோர் வீதிகளில் காவல் புரிகின்றனர்; குழந்தைகளுக்கு கல்வி, அறிவுரை வழங்குகிறார்கள்; மருத்துவமனைகளில் காய்ச்சலின் அளவை சோதிக்கிறார்கள்; தீயணைப்பில் முயன்று நிற்கிறார்கள்; நல்ல புத்தியை மெல்லிய சத்தத்தில் எடுத்துச் சொல்கிறார்கள். உலகம் காப்பாற்றப்படுவதும், மனிதன் உலகில் உயிரோடிருப்பதும் நல்லெண்ணம் கொண்ட இம்மக்களாலேயே. இவர்கள் தங்கள் செயல்களை விளம்பரமின்றி அமைதியாகச் செய்வதினால் இவ்வுண்மையைக் காண அநேகர் தவறுகின்றனர்.

---

28. பண்புள்ள: மற்றவர் பற்றிய பார்வை. தன் நிலைப்பாடு. பாரம்பரியத்தின்படி, நல்லெண்ணம் கொண்ட மனிதர் எனப்படுவர். (சக மாந்தரை நன்மையாக எண்ணி அவர்கள் நலனுக்காக செயல்படுபவர்)

29. பிரச்சாரகன்: பிரச்சாரம் செய்பவும் ஒரு மனிதர் அல்லது குழு: பொதுவாக உண்மைக்குப் புறம்பாக தனக்கு சாதகமாகவோ மற்றவருக்கு பாதகமாகவோ கருத்துக்களையோ, தகவல்களையோ, வதந்திகளையோ பரப்புதல். விசாரணையில் ஒருவருடைய மரியாதையை கெடுத்து. ஒருவருடைய முக்கியத்துவத்தை குறைத்து. குற்றவாளியாக்கும்படி பத்திரிக்கைகளில் அல்லது வானொலி, தொலைகாட்சிகளில் அவரைப்பற்றி பொய்யான செய்திகளை வெளியிடுதல்.

நல்லெண்ணம் கொண்ட இம்மக்கள் தீயவர்களின் தாக்குதலுக்கு உள்ளாகக் கூடும். இம்மக்களின் நலன்களுக்காக உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அவர்கள் தீமையிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். ஏனெனில், உங்களுடைய மற்றும் உங்கள் குடும்பத்தினர், நண்பர்களுடைய நல வாழ்வும், இம்மக்களுடைய நலவாழ்வை சார்ந்திருக்கிறது.

நற்பண்புள்ள மாந்தருக்கு ஒருவர் ஆதரவு
தரும்பொழுது மகிழ்ச்சியின் வழியைப்
பின்தொடர்வது மிக எளிதாகிறது.

12. உங்கள் சுற்றுப்புறசூழலைப் பாதுகாத்து[30] மேம்படுத்துவீர்

12-1. நல்ல தோற்றமுடையவர்களாய் இருங்கள்.

மற்றவர்கள் காணும் அன்றாடக் காட்சிகளில், தங்கள் தோற்றமும், ஆடைகளும் சிறு பங்கு வகிக்கின்றன என்பது சிலருக்குத் தோன்றுவதில்லை. அவர்கள் தங்களைத் தாங்களே பார்க்க நேரம் கிடைக்காதவர்களாயிருக்கலாம். நம்முடைய தோற்றத்தை வைத்தே மற்றவர்கள் நம்மை எடைபோடுகிறார்கள் என்பதை சிலர் உணர்வதில்லை.

ஆடைகள் விலை கூடுதலாக இருக்கக் கூடும். ஆனால் சோப்பு போன்ற, சரீரத்தைப் பராமரிக்கத் தேவையான பொருட்கள் வாங்குவது அவ்வளவு கடினமானது அல்ல. பராமரிப்புத் திறமைகளை ஒரே நாளில் பூரணமாக்க இயலா விட்டாலும் அதில் படிப்படியாக வளர முடியும்.

நாகரீகம அடையாத அல்லது நாகரீகம் கெட்டழிந்த சமுதாயங்களில், மற்றவர்கள் கண்களுக்கு உறுத்தலாகக் காட்சியளிப்பது நாகரீகம் என வரவேற்கப்படலாம். உண்மையில் அது நாகரீகம் அன்று; சுயமரியாதைக் குறைவின் வெளிப்பாடே.

கடின உழைப்பிலும், உடற் பயிற்சியிலும் ஒருவரது தோற்றம் கலையக் கூடும். தன் தோற்றத்தை சீராக்காமல் இருப்பதற்கு அவை ஒரு காரணமாக மாட்டாது. எடுத்துக்காட்டாக ஐரோப்பா மற்றும் இங்கிலாந்து நாட்டு பணியாட்கள் பலர் பணியின் போதும் நல் தோற்றத்தைக் கொண்டிருப்பதைக் காணலாம். மிகச் சிறந்த தடகள வீரர்கள் பலரும் வியர்வையில் குளித்து நனைந்திருக்கும் நிலையிலும் நல்ல தோற்றமளிப்பதைக் காணலாம்.

அருகில் சுத்த தோற்றமற்றவர்கள் இருந்தால் அச்சூழ்நிலையில் இருக்கும் மற்றவர்களின் மனபலம்[31] மறைமுக பாதிப்புக்குள்ளாகும்.

---

30. பாதுகாப்பு: முன்னெச்சரிக்கை, தீங்கடையாமல் தடுத்தல்; பாதுகாத்தல்

31. மனபலம்: தனிப்பட்ட அல்லது ஒரு குழுவினரின் மனம் மற்றும் உணர்வுகளின் வேகம், நலம் எனும் உணர்வு; தொடர்ந்து செல்லும் வேட்கை, பொது நோக்க எண்ணம்.

உங்களை சுற்றியுள்ளவர்கள் சிறந்த தோற்றமுடையவர்களாய் இருக்கும் போது அவர்களைப் பாராட்டுங்கள். அப்படி இல்லாத போது அதற்கான காரணத்தை அறிந்து, சரி செய்ய அவர்களுக்கு உதவுங்கள். அது அவர்களுடைய சுயமரியாதையையும், மனபலத்தையும் வளர்க்கும்.

12-2. உங்களை சுற்றியுள்ள இடங்களின் சூழலை சிறப்பாக வையுங்கள்.

மக்கள் தங்கள் சொந்த உடைமைகளையும், இடங்களையும் கிரமமாக வையாமல், தாறுமாறாகப் போடும்போது உங்களுடைய இடங்களும் பாதிக்கப் படக் கூடும்.

மக்கள் தங்கள் இடங்களையும், பொருட்களையும் பராமரிக்காதவர்களாய் காட்சியளிக்கும் போது, அப்பொருட்களும் இடங்களும் தங்களுக்கு உண்மையில் சொந்தமில்லை என்ற தங்களுடைய உணர்வையே பிரதிபலிக்கிறார்கள். இளைஞர்களாய் அவர்கள் இருந்த போது அவர்களுக்குக் "கொடுக்கப்பட்ட" பொருட்களுடன் அநேக நிபந்தனைகளும், கட்டுப் பாடுகளும் விதிக்கப்பட்டிருக்கக்கூடும். அல்லது உடன்பிறந்தோர், பெற்றோரால் அவர்களிடமிருந்த பொருட்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கலாம். ஆகவே அப்பொருட்கள் அவர்களுக்கு சிறப்பாகத் தோன்றாமற் போயிருக்கக் கூடும்.

அவர்களுடைய சொத்துக்கள் வசிக்கும் இடம், வேலை தலங்கள். வாகனங்கள் ஆகியவற்றின் நிலையும் தோற்றமும் அவை யாருக்கும் சொந்தமில்லை என்பதைக் காட்டுகின்றன. இதைவிடக் கொடியது, சில வேளைகளில் பொருளுடைமையின் மேல் அவர்களுக்குக் காணப்படும் கோபமே. வன்முறை வெறியாட்டம்[32] அக்கோபத்தின் வெளிப்பாடே. "ஒருவருக்கும் சொந்தமல்லாத" வீடு, வாகனம் சூறையாடப்படுகிறது.

குறைந்த செலவிலான வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்போர் வெகு சீக்கிரம் அவ் வீடுகள் பழுதடைந்து சேதமடைவதைக் கண்டு சோர்ந்து போகிறார்கள். ஏழை என்ற வார்த்தை கொஞ்சமோ அல்லது ஒன்றுமே இல்லாதவர்கள் என பொருள் கொள்கிறது. பலவகைகளில் ஒடுக்கப்படும் ஏழைகளும் தங்களுக்கு ஒன்றும் சொந்தமில்லை என்ற உணர்வுக்கு வந்து விடுகிறார்கள்.

ஏழையாயிருந்தாலும் பணக்காரனாக இருந்தாலும், எந்தக் காரணத்திற்காகவும் தங்கள் உடைமைகளையும் இருப்பிடங்களையும் சீராக வைக்காதவர்கள், தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு ஒழுங்குப் பிரச்சனைகளை உருவாக்குகிறார்கள். இத்தகைய சம்பவங்களை நீங்கள் நினைவுகூறக் கூடும் என நம்புகிறேன்.

---

32. வன்முறையாட்டம்: பொது அல்லது தனிநபர் உடைமைகளை குறிப்பாக அழகான அல்லது கலைநயம் மிகுந்த பொருட்களை தீயநோக்கத்துடன் மனதார சேதப்படுத்துதல்.

வாழ்வில் அவர்களுக்கு சொந்தமானது என்ன என்று இப்படிப்பட்ட மனிதர்களிடம் கேட்டுப் பாருங்கள். உங்களுக்கு ஆச்சரியமான பதில்கள் கிடைக்கக் கூடும். அப்பதில்களின் அடிப்படையில் அவர்களுக்கு நீங்கள் செய்யக் கூடிய உதவிகள் அதிகமாக இருக்கும்.

உடைமைகளையும், இடங்களையும் ஒழுங்குறப் பாவிக்கும் திறமையைப் பயிற்றுவிக்க முடியும். ஒரு பொருளை எடுத்து உபயோகித்த பின் எடுத்த இடத்தில் வைத்தால், மறுபடியும் உபயோகிக்க அப்பொருளைத் தேட வேண்டிய அவசியமிராது என்ற ஆலோசனை பலருக்குப் புதிதாகத் தோன்றலாம். வைத்த இடம் தெரியாமல், பொருட்களைத் தேடுவதில் சிலர் தங்கள் பாதிநேரத்தை செலவிடுகின்றனர். பொருட்களை ஒரு ஒழுங்கு அமைப்பிற்குள் கொண்டு வர சிறிது நேரம் செலவழித்தால், நேரம் வீணாகாமல் நடக்கும் வேலை பலனாகக் கிடைக்கும். ஒழுங்கு வைத்தல், நேரத்தை வீணாக்கும் வேலையல்ல; நேரத்தை சேமிக்கும் வேலையே.

உங்களுடைய உடைமைகளையும் இடங்களையும் பாதுகாக்க மற்றவர்கள் தங்களுடையதைப் பாதுகாக்கச் செய்யுங்கள்.

12-3. உலகின் சுற்றுப்புறசூழல் பாதுகாக்கப்பட உதவுங்கள்.

இவ்வுலகில் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு என்றும் உலகைக் காப்பாற்ற அனைவரும் உதவ வேண்டும் என்ற கருத்து, சிலருக்கு கிரகிக்கக்கூடாததாகவும், யதார்த்தத்திற்கு ஒவ்வாததாயும் தோன்றுகிறது. இன்று உலகின் மறு பகுதியில் நடைபெறும் செயல், வெகு தொலைவில் நடைபெற்றாலும், உங்கள் வீட்டில் நடைபெறும் செயல்களைப் பாதிக்கக் கூடும்.

உயிர்களை ஆதரிக்கக்கூடாத நிலைக்கு நம் உலகம் கெடக்கூடும் என்று சமீபத்திய வெள்ளி கிரக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

அதிகமான காடுகளை வெட்டி அழித்ததும், நதிகளையும் சமுத்திரங்களையும தூய்மை கெடச் செய்ததும், வாயு மண்டலத்தை மாசுபடச் செய்ததும் இந்நிலையை நமக்கு ஏற்படுத்தியுள்ளது. பூமியில் வெப்பம் உயர்ந்து, வானிலிருந்து கந்தக அமில மழை பெய்யும்; அனைத்து உயிர்களும் மாளக் கூடும்.

"நீங்கள் சொல்வது உண்மை என்று வைத்துக் கொண்டாலும் அதற்கு நான் என்ன செய்ய முடியும்" என்று நீங்கள் கேட்கலாம். உலகின் சூழலைக் கெடுக்கும் ஒருவர் காரியங்களை மக்கள் செய்யும் போது முகஞ்சுளிக்கும் செயலை மாத்திரம் செய்தாலே இவ்வுலகிற்கு அவர் நன்மை செய்தவராவார். உலகின் சூழலை தகர்க்கக் கூடாது என்ற கருத்தை தான் உடையவராய் மற்றவர்களுக்கு அதை எடுத்துச் சொல்வதும் உலகிற்குச் செய்யும் நன்மையாகும்.

உலகைப் பற்றிய அக்கறை ஒருவருடைய வீட்டின் முன் அரங்கிலே ஆரம்பிக்கிறது. அது ஒருவர் பள்ளிக்கோ அல்லது வேலைக்கோ செல்லும் பாதையில் தொடர்கிறது. ஒருவர் செல்லும் இன்பப் பயணத்தையும், விடுமுறை சுற்றுலாவையும் அது உள்ளடக்குகிறது. தண்ணீர் குழாய்களையும், மழை மற்றும் கழிவு நீர் வடிகால்களையும் அடைக்கும் பொருள்களை கண்ட இடங்களில் எறியாமலும், தீப்பிடிக்கக் கூடிய தூரிகைகளையும் துடைப்பங்களையும் சிதறாமலும் இருக்க வேண்டும். ஒய்வு நேரங்களில் ஒரு மரக்கன்று நடுதல் அற்பமாகத் தோன்றலாம். ஆனால் உலகுக்கு அது ஒரு உதவியே.

சில நாடுகளில், வயதானவர்கள் மற்றும் வேலை வாய்ப்பற்றவர்கள் நொந்து வீணாய் போவதில்லை. அவர்கள் தோட்டங்களையும், பூங்காக்களையும், காடுகளையும் பேணுகிறார்கள். குப்பைகளைப் பொறுக்கி உலகை அழகு செய்கிறார்கள். உலகை பாதுகாக்கத் தேவையான ஆதாரங்களுக்குக் குறைவில்லை. பெரும்பாலும் அவை அலட்சியம் செய்யப்படுகின்றன. 1930ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் "மக்கள் பராமரிப்பு படை" (Civilian Conservation Corps) என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. வேலையற்ற அதிகாரிகளையும், இளைஞர்களையும் அங்கத்தினர்களாகக் கொண்டு இ யங்கியது. அப்பஞ்ச காலத்தில் தேசத்திற்காய் அதிக வருமானம் சேர்த்த ஒரு சில அமைப்புகளுள் அதுவும் ஒன்று. இவ்வமைப்பின் மூலம் செலவிட்டதைக் காட்டிலும் அவர்கள் மூலம் கிடைத்த வரவு அதிகம். பெரிய அளவில் காடுகளை இவ்வமைப்பு மீண்டும் உண்டாக்கியது. மேலும் பல நற்பணிகளைச் சிறப்பாய் செய்து அமெரிக்காவின் பகுதியில் உலகுக்கு நன்மை செய்தது. இவ்வமைப்பு தற்போது இல்லை. இத்தகைய அமைப்புகளும், தகுதியான திட்டங்களும் தேவை என்று ஒருவர் தன் கருத்தை எடுத்துச் சொல்லி அரசியல் தலைவர்களும், நிறுவனங்களும் சுற்றுப்புற சூழல் சார்ந்த பணிகளில் ஈடுபடச் செய்ய வேண்டும்.

தொழில் நுட்பத்திற்குப் பஞ்சமில்லை. ஆனால் தொழில் நுட்பத்தை பயன்படுத்த பணம் தேவை. அறிவுப்பூர்வமான பொருளாதாரத் திட்டங்கள் மக்களைப் பாதிக்காத வகையில் இயற்றப்பட்டு பின்பற்றப்படும் போது பணம் கிடைக்கும். இத்தகைய பொருளாதாரத் திட்டங்கள் சாத்தியமே.

உலகைக் காப்பாற்ற மக்கள் அநேக காரியங்களைச் செய்ய முடியும். உலகைக் காப்பாற்றவேண்டும் என்ற உணர்வு கொண்டிருப்பது முதல் காரியம். உலகை தாங்கள் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வை மற்றவர்களுக்கும் கொடுப்பது அதன் வளர்ச்சி.

உலகை அழிக்கக் கூடிய ஆற்றலை மனிதன் பெற்றுவிட்டான். உலகைக் காப்பாற்றக் கூடிய ஆற்றலுக்கும் செயல்களுக்குள்ளும் நேராக அவன் உந்தப்பட வேண்டும். அதுவே நாம் நிலை நிற்கக் கூடிய காரியம்.

சுற்றுப்புற சூழ்நிலைகளைப் பாதுகாத்து மேம்படுத்த
மற்றவர்கள் முன்வராத போது, மகிழ்ச்சியின் வழி,
தளம் அமைக்கப்படாத சாலை போன்று,
பயணம் செய்ய கடினமாயிருக்கும்.

13. திருடாதீர்கள்

பொருள், உடைமைகளின் மேல் பிறருக்கிருக்கும் உரிமையை ஒருவர் மதியாத பொழுது அவரது பொருட்கள், சொத்துக்கள் மேல் அவருக்கு உள்ள உரிமையும் ஆபத்துக்குள்ளாகிறது.

நியாயமான வழிகளில், ஏதோ ஒரு காரணத்தினால் பொருட்களைச் சம்பாதிக்க முடியாமற் போகிற ஒருவர், உலகில் எவரும் எதையும் சொந்தமாகக் கொண்டிருக்க வில்லை என்று தம்மை ஆறுதல்படுத்திக் கொள்ளலாம். ஆனாலும் அவர் மற்றவரின் உடைமைகளைத் திருடும் போது அவர் மேல் எடுக்கப்படும் நடவடிக்கைகளால் அவருக்கு உண்மை விளங்கும்.

அன்றாட வாழ்வில் திருடன் புதிர்களை விதைக்கிறான். பொருட்கள் மறைந்த விதம் அறியப்படாததினால் மர்மங்கள் நிறைகின்றன. திருடப்பட்ட பொருள்களின் பெறுமதியை விட ஒரு திருடனின் செயல் அதிகக் கஷ்டத்தை உருவாக்குகிறது.

விரும்பத்தக்க பொருட்களின் விளம்பரங்களைத் திருடர்கள் பார்க்கிறார்கள். நேர்மையான செயல் மூலம் அப்பொருட்களை சம்பாதிப்பது இயலாது என்ற தங்களது இயலாமை அவர்களை வருத்துகிறது, எனவே அப்பொருட்களைத்

திருடுகிறார்கள். சில திருடர்களுக்கு, மற்றவர் பொருளை திருட்டுத்தனமாக அபகரிக்க வேண்டும் என்ற ஒரு எண்ண உந்துதல் உண்டாவதே திருடுவதற்குப் போதுமான காரணமாகும்.

திருடுவதற்கு சிலகாரணங்கள் இருந்தாலும், பெரிய இலாபத்தை சுலபத்தில் அடைவதாகத் திருடர்கள் போடும் தப்புக் கணக்கு முக்கியக் காரணமாகும். ஒரு திருடன் திருடுவதற்குக் கொடுக்கும் கிரயம் உண்மையில் மிக அதிகம். சரித்திரத்தில் பிரபலமான திருடர்களும், கொள்ளையர்களும் தங்கள் சாதனைகளின் பயனாக கஷ்டங்கள் நிறைந்த கடினமான மறைவிடங்களிலும், சிறைச்சாலைகளிலும் தங்கள் வாழ்நாளைக் கழித்திருக்கின்றனர். எத்தனை கோடிகளைத் திருடுவதும் இப்பரிதாபமான வாழ்க்கைக்கு ஈடாகாது. தங்கள் வாழ்நாளில் வெகுசில சமயங்களில் மாத்திரம் "நல்ல வாழ்க்கையை" அவர்கள் ருசித்திருக்கின்றனர்.

திருட்டு பொருட்கள் தங்கள் பெறுமதியில் குறைந்து விடுகின்றன. அவைகள் ஒளித்து வைக்கப்பட வேண்டியதாகின்றன. அவை நிமித்தம் ஒருவர் எந்நேரமும் கைது செய்யப்பட்டு தன் சுதந்திரத்தை இழக்க நேரிடலாம். உடைமைகளின் தனிமனித உரிமையைப் பெரிதளவில் மறுக்கும் பொதுஉடைமை நாடுகள் கூட

திருடர்களை சிறையில் தள்ளுகின்றன. பொருளைத் திருடுவது, அப்பொருளை நேர்மையாய் சம்பாதிக்க தன்னால் இயலாது என்று ஒப்புக் கொள்வதேயாகும். அல்லது முட்டாள்தனத்தின் வெளிப்பாடாகவும் இருக்கும். ஒரு திருடனை அவன் எவ்வகைத் திருடன் எனக் கேட்டுப் பாருங்கள். அவன் மேற்சொன்ன இரண்டு வகையில் ஒன்றைச் சேர்ந்தவனாயிருப்பான்.

திருடிய பொருட்களுடன் மகிழ்ச்சியின் வழியில்
பயணம் செய்ய முடியாது

14. நம்பிக்கைக்குப் பாத்திரராயிருங்கள்

தன்னைச் சுற்றியுள்ளவர்களின் நம்பகத்தன்மையைக் குறித்த நிச்சயம் ஒருவருக்கு இல்லாதிருக்குமானால் அவரை சூழ ஆபத்து இருக்கிறது. அவர் நம்பி இருக்கிறவர்கள் அவரின் நம்பிக்கையைப் பொய்யாக்கும் போது அவருடைய வாழ்க்கை பிரச்சனைக்குள்ளாகும் நிலை உருவாகும்.

மனித உறவுகளில் பரஸ்பர நம்பிக்கை மிக உறுதியான பங்கு வகிக்கிறது. அது இல்லாத பட்சத்தில் மனித உறவுகள் நிலைகுலைந்து வீழ்கின்றன.

நம்பகத்தன்மை விலைமதிப்பற்றது. ஒருவரிடம் அது காணப்படும் போது அவர் மதிப்புள்ளவராகக் கருதப்படுகிறார். ஒருவரிடம் நம்பகத்தன்மை மறையும் போது அவர் மதிப்பற்றவராகிறார்.

நம்பகத் தன்மையை வளர்க்கவும், அதை வெளிப்படுத்தவும் தன்னைச் சுற்றியுள்ளவர்களை ஒருவர் ஊக்குவிக்க வேண்டும். அப்படிச் செய்வதினால் அவர்கள் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் அதிகப் பிரயோஜனமுள்ளவர்களாவார்கள்.

14-1. கொடுத்த வாக்கினைக் காப்பாற்றுங்கள்.

ஒரு நிச்சயத்தையோ, வாக்குறுதியையோ, உறுதிமொழியையோ ஒருவர் மற்றவருக்குக் கொடுத்தால், தான் சொன்னபடி அதை முடித்துக் கொடுக்க வேண்டும். ஒன்றை செய்கிறேன் என்று சொன்னவர்கள் அதைச் செய்ய வேண்டும். ஒன்றை செய்யமாட்டேன் என்று சொன்னால் அதை செய்யக்கூடாது.

சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுகிறவரா என்பதின் அடிப்படையிலே ஒருவரைப் பற்றிய மதிப்பு பெருமளவில் அமைகிறது. கொடுத்த வாக்கைக் காப்பாற்றாத போது, பெற்றோர்கள் கூட தங்கள் பிள்ளைகளின் பார்வையில் எவ்வளவாய் நல்லெண்ணத்தை இழந்து விடுகிறார்கள் என்பது ஆச்சரியமளிக்கிறது.

தங்கள் வார்த்தையைக் காப்பாற்றுகிற மனிதர்கள் நம்பப்படுவதுடன் மதிக்கப்படவும் செய்கிறார்கள். தங்கள் வார்த்தையைக் காப்பாற்றாதவர்கள் குப்பைகளைப் போல மதிக்கப் படுகிறார்கள். பொதுவாக, தங்கள் வார்த்தையைக் காப்பாற்றாதவர்கள் மறுபடியும் ஒரு வாய்ப்புப் பெறுவதில்லை.

தன் வார்த்தையைக் காப்பாற்றாத மனிதன், நிறைவேற்றாத "உறுதி மொழிகளிலும்" "நிபந்தனைகளிலும்" தான் சிக்குண்டு பிடிக்கப்பட்டிருப்பதை விரைவில் காண்பான். சம்பந்தப்பட்டவர்களிடம் இயல்பான தொடர்புகள் அறுந்து போகுமளவு பாதிப்பு விளைகிறது. வார்த்தைகளைக் காப்பாற்றாத செயலை விட ஒருவரை அவருக்கு பழக்கமானவர்களிடமிருந்து புறம்பாக்கும் செயல் வேறு எதுவுமில்லை.

வாக்குறுதிகள் எளிதாக கொடுக்கப்படுவதை ஒருவர் ஒருபோதும் அனுமதிக்கலாகாது. வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டு விட்டால் காப்பாற்றப் படவேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும். வார்த்தைகளைக் காப்பாற்றாத மக்களிடம் ஐக்கியமாயிருக்கும் ஒருவரது வாழ்க்கை மிகவும் ஒழுங்கற்றுப் போகக் கூடும். இது ஒரு சாதாரண விஷயமல்ல.

நம்பத் தகுந்தவர்களுடன் மகிழ்ச்சியின் வழியில்
பயணம் செல்வது மிக மிக சுலபமானது.

15. உங்கள் கடமைகளை[33] நிறைவேற்றுங்கள்

வாழ்க்கைப் பயணத்தில் தவிர்க்க முடியாத பொறுப்புகள் நமக்கு உள்ளன. உண்மையில் பிறக்கும்போதே மனிதன் சில கடமைகளுடன் பிறக்கிறான். வளரும்போது கடமை பொறுப்புகள் கூடுதலாக சேர ஆரம்பிக்கின்றன. தன்னைப் பெற்றதற்காகவும், வளர்த்ததற்காகவும் ஒருவர் பெற்றோருக்குக் கடமைப்பட்டிருக்கிறார் என்பது ஒரு புதுமையான அல்லது நவீனகால சிந்தனை அல்ல. பெற்றோர் பிள்ளைகளை பெரும்பாலும் இக்கடமையை ஆற்ற வற்புறுத்துவதில்லை என்பது பெற்றோரின் பெருமை ஆகும். எப்படியிருந்தாலும் அது கடமைதான். குழந்தைகள் கூட இக்கடமையை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். வாழ்க்கை தொடரும் போது மற்றவர்களுக்கும், நண்பர்களுக்கும், சமுதாயத்திற்கும், உலகத்திற்கும் தான் செய்ய வேண்டிய கடமைகளை ஒருவர் கூடுதலாக சேர்த்துக் கொள்ளுகிறார்.

ஒருவர் தனது கடமையைச் செய்யவோ, நிறைவேற்றவோ அனுமதி மறுப்பது கடுமையான இடையூறாகும். குழந்தைகளும், சிறுவர்களும் இளைஞர்களும் கடமை உணர்ச்சியுடன் செய்யும் சிறு சிறு செயல்களைத் தடை செய்வதும் அதைரியப்படுத்துவதும் "அவ்வயதில் அவர்களிடம் தோன்றும் கலகக்குணத்திற்கான" முக்கியக் காரணமாகும்.

ஒரு குழந்தையின் "அற்ப முயற்சிகள்", இளைஞனின் எளிய ஆலோசனை, நல்ல பிள்ளையாக நடக்க எடுக்கும் பிரயத்தனங்கள் எல்லாம் பொதுவாக அங்கிகரிக்கப்படாமலும், கண்டுகொள்ளப்படாமலும் போகின்றன. அவைகள் சிறப்பாக அமையாமலும், திட்டமிடப்படாமலும், நிலையற்றதாகவும் இருக்கலாம். ஆனாலும் அவை ஏற்றுக் கொள்ளப்படாத பட்சத்தில் "நிறைவேற்றப்படாத கடமை உணர்ச்சி", வேறுபட்ட நியாயங்களாக, செயல்பாடுகளாக அவர்களுக்குள் உருவெடுக்கிறது. "ஒருவர் எவருக்கும் கடமைப் பட்டவரல்ல", "முதலாவது எனக்கே மற்றவர்கள் கடமைப்பட்டவர்கள்" ,"என்னைக் கேட்டு என்னைப் பெற்றார்களா?", "என் பெற்றோரும் பாதுகாவலரும் நல்லவர்கள் அல்ல", "வாழ்க்கை வாழத் தகுந்தது அல்ல" என்பன போன்றவை வெடிக்கும் நியாயங்களுக்கு சில உதாரணங்களாகும். இப்படி அவர்கள் மனம் உடைந்தாலும், கடமைகள் அவர்கள் மேல் பெருகவே செய்கின்றன.

33. கடமை: தான் பெற்றுக் கொண்ட நன்மைக்காகவோ சேவைக்காகவோ மற்றவருக்கு நன்றிக் கடன் பட்டிருக்கும் நிலை, உண்மை நிலை அல்லது தன்மை. ஒரு வேலையோ ஒப்பந்தமோ வாக்குறுதியோ அல்லது வேற எந்த சமுதாய ஒழுக்க மற்றும் சட்ட நிர்பந்தமோ ஒரு குறிப்பிட்ட செயல் நடவடிக்கையை தொடாரவோ அல்லது தவிர்க்கவோ ஒருவரை கட்டுப் படுத்துதல்.

கடமைகளை நிறைவேற்ற வழியற்றவர்களை "கடமை பாரம்" அவர்களால் சுமக்க இயலாத அளவு அழுத்தக் கூடும். இப்பாரம் தனி வாழ்க்கையிலும், சமுக வாழ்க்கையிலும் பல பிரச்சனைகளை உருவாக்கக் கூடும். கடமைப் பொறுப்புகளை நிறைவேற்ற இயலாதவர்கள், தாங்கள் யாருக்கு கடமைப் பட்டிருக்கிறார்களோ அவர்களிடமே ஏதும் காரணமின்றி கோபப்படுவதைக் காணலாம்.

நிறைவேற்றப்படாத கடமைப் பொறுப்புகளினால் அல்லல்படுபவருக்கு ஒருவர் உதவ முடியும். அவர் நிறைவேற்றாத கடமை பொறுப்புகள் அனைத்தும் அவரது நல் நடத்தையில், சமுதாய அளவில், பண விஷயத்தில் இருக்கலாம். இக்கடமைகளை எல்லாம் நிறைவேற்ற வழிகளைக் கண்டு பிடித்து அவற்றை நிறைவேற்ற அவருக்கு உதவி செய்ய வேண்டும்.

பொருளாதார அடிப்படை அற்ற கடமைகளை நிறைவேற்ற குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் முன்வரும் போது அவைகளைப் பெரியவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். பொருளாதார அடிப்படையிலான கடமைகளை நிறைவேற்ற, சம்பந்தப்பட்டவர்கள் கலந்து பேசி பொதுவான ஏற்பாடொன்றை உருவாக்கலாம்.

தன் திராணிக்கு மிஞ்சிய கடமை பொறுப்புகளை ஒருவர் ஏற்பதை பாராட்டாமல் அதைரியப்படுத்துங்கள்.

நிறைவேற்றப்படாத கடமைகளின் பாரத்தை சுமந்து கொண்டு மகிழ்ச்சியின் வழியில் பயணம் செய்வது மிகக் கடினம்.

16. உழைப்பாளியாயிருங்கள்[34]

உழைப்பு எல்லா நேரங்களிலும் இனிமையாய் இருப்பதில்லை. ஆனால் நோக்கமற்று, சலிப்புடன் சோம்பேறிகளாய் வாழ்பவர்களைவிட உழைப்பவர்கள் அதிக மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். குழந்தைகள் தாங்கள் செய்வதற்கு ஒன்றுமில்லாதிருக்கும் போது சோர்வுடன் தாயைச் சுற்றி வருகிறார்கள். வேலையில் இல்லாதவர்கள், "அரசாங்கத்தின் நிவாரண[35] உதவி" (டோல்[36]) பெறுகிறவர்களாய் இருந்தும் கூட மனம் ஒடிந்த நிலையிலே காணப்படுகிறார்கள் என்பது பிரசித்தமானது. வேலையில் இருந்து ஓய்வு பெறுகிறவர்கள் மேலும் சாதிப்பதற்கு ஒன்றுமில்லாமல், செயலற்ற தன்மையினால், சீக்கிரம் அழிந்து போகிறார்கள் என்பது புள்ளி விபரங்கள் காட்டும் உண்மை.

பொழுதை ஓய்வாக செலவிடுங்கள் என்ற சுற்றுலா நிறுவனத்தின் அழைப்பால் கவரப்பட்டுச் செல்லும் பயணிகள் கூட, சுற்றுலாவின் போது ஈடுபட ஒன்றுமில்லாவிட்டால் சுற்றுலா நடத்துனரை வெறுப்படையச் செய்து விடுகின்றனர். ஏதாவது ஒரு வேலையில் ஈடுபாட்டுடன் சுறுசுறுப்பாக இருந்தால் துயரம் கூட எளிதில் தாங்கக்கூடியதாக தோன்றும்.

காரியங்களை சாதிப்பதினால் மனத்தெம்பு மிகவும் கூடுகிறது. உற்பத்தியே[37] மன எழுச்சியின் அடித்தளம் என்பதை நிரூபிக்க முடியும்.

சுறுசுறுப்பாக இல்லாதவர்கள் அதிக வேலைப் பளுவை தங்களைச் சுற்றியுள்ளவர்கள் மேல் திணித்து விடுகிறார்கள். மற்றவர்களுக்குப் பாரமாக இருக்கிறார்கள். சோம்பேறிகளுடன் இணைந்து செயல்படுவது மிகக் கடினமான காரியம். அவர்கள் மற்றவர்களை சோர்வடையச் செய்கிறவர்களாய் இருப்பதுடன் சிறிது ஆபத்தானவர்களாகவும் இருக்கின்றனர்.

34. உழைப்பு: படிக்கவோ உழைக்கவோ பலத்துடன் தன்னை ஈடுபடுத்துதல்.சுறுசுறுப்புடனும் குறிக்கோளுடனும் காரியங்களை செய்து முடித்தல். சோம்பேறியாய் ஒன்றும் சாதிக்காமல் இருப்பதற்கு எதிரானது.
35. நிவாரணம்: தேவை அல்லது வறுமை நிமித்தம் ஒரு அரசு நிறுவனத்தால் மக்களுக்க வழங்கப்படும் பொருள்

அல்லது பணம்.
36. டோல்: அரசு நிவாரணத்திற்கு இங்கிலாந்தில் வழங்கும் ஒரு சொல்.
37. உற்பத்தி: ஒரு செயலின் நிறைவு, உபயோகமுள்ளதும் விலை மதிப்புள்ளதும் அல்லது சாமானியமானதும் செய்யத் தகுந்ததும் சொந்தமாக்கத் தகுந்ததுமான குறிப்பிட்ட வேலை திட்டம் அல்லது பொருளைச் செய்து முடிந்தல்.

இத்தகைய மக்களை ஏதாவது வேலையில் சேர்ந்து, அவ்வேலையில் சுறுசுறுப்பாக இருக்கத் தூண்டுவது இப்பிரச்சனைக்கு நடைமுறைத் தீர்வாகும். அப்படிச் செய்தால், உழைப்பின் நிலைத்த பயனான பெருகும் உற்பத்தியைக் காணமுடியும்.

காணக் கூடிய உற்பத்தியைத் தரும்
உழைப்பு சேரும்போது மகிழ்ச்சியின்
வழி நெடுஞ்சாலைப்
பயணமாகிறது.

17. சமர்த்தராயிருங்கள்[38]

மிக நுட்பமான கருவிகளும், அதிவேக இயந்திரங்களும், வாகனங்களும் நிறைந்து விட்ட இக்காலத்தில், ஒருவருடைய நீடித்த வாழ்வின் நிச்சயமும், அவருடைய நண்பர்கள் குடும்பத்தாரது வாழ்வின் நிச்சயமும், பெருமளவில் மற்றவர்களுடைய செயல் திறமையையே சார்ந்திருக்கிறது.

சந்தை வெளிகளிலும், ஆய்வு கூடங்களிலும், மனித நலத் துறையிலும், அரசாங்கத்திலும், திறமையின்மை[39] அநேகர் உயிருக்கு அச்சுறுத்தலாகவும், அவர்களது எதிர்காலத்தை அழிக்கக் கூடியதுமாயிருக்கிறது.

இதற்கு சான்றாக அநேக உதாரணங்களை நீங்கள் நினைவுகூர முடியும் என்று நான் நினைக்கிறேன்.

தன் விதியைக் கட்டுப்படுத்த மனிதனுக்கு எப்பொழுதும் உள்ளுணர்வு உள்ளது. மூடப்பழக்க வழக்கங்கள், தேவர்களுக்கிடப்படும் பலிகள், வேட்டைக்குச் செல்வதற்கு முன் ஆடும் சமய சடங்கு நடனங்கள் எல்லாம் எத்தனை பயன் அற்றதாயினும், தன் விதியைக் கட்டுப்படுத்த மனிதன் மேற்கொள்ளும் பிரயத்தனங்களே.

மனிதன் சிந்திக்கப் பயின்று, அறிவை மதித்து, திறமையுடன் அதை அப்பியாசிக்க ஆரம்பிக்கும் வரை, தன் சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்த அவனால் கூடாமற் போயிற்று. திறமையுள்ளவர்களாயிருக்கக்கூடிய வாய்ப்பைக் கொடுத்ததே "பரலோகம் மனிதனுக்குக் கொடுத்த உண்மையான வரம்".

வாழ்வின் அன்றாட செயல்களிலும், விருப்பங்களிலும் மனிதன் திறமையையும், ஆற்றலையும் மதிக்கிறான். இத்திறமைகள் நிறைந்த தலைவனோ, விளையாட்டு வீரனோ ஆராதிக்கப்படுமளவு போற்றப்படுகிறார்கள்.

உண்மையான திறமையின் பரீட்சை அதன் இறுதி முடிவே. ஒரு மனிதன் உயிர் பிழைப்பதும், அழிவதும், அவனுடைய திறமையின் அளவைப் பொருத்தே அமைகிறது.

எந்த ஒரு தகுதியான செயலிலும் திறமையைப் பெற பிறரை ஊக்குவியுங்கள். திறமையைக் காணும் போது பாராட்டி, பரிசு வழங்குங்கள்.

38. சமர்த்தன்: நேர்த்தியாக வேலை செய்யக் கூடிய திறமை செய்யவல்ல செயல்களில் திறமையுடன் செயல்படுதல். தன் வேலைகளின் தேவைக்கேற்ற திறமைகளுடன் இருத்தல்.
39. திறமையின்மை: அறிவு திறமை செயலாற்றலில் குறைவுற்றிருத்தல், அரைக் குறையாகச் செய்தல், திறனற்ற (ஆற்றலற்ற) செயல், பெரும் பிழைகளையும் தவறுகளையும் செய்யக் கூடிய

செயல்பாட்டின் உயர்ந்த தரத்தை மற்றவர்களிடம் கேளுங்கள். நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும பாதுகாப்பாய் வாழ அத்திறமைகள் போதுமானவைகளா என்பதே சமுதாயத்தில் உங்களுக்குள்ள பரீட்சை.

திறமையின் கூறுகள் பார்த்தல், படித்தல், பயிற்சித்தல்[40]

17-1. பாருங்கள்.

பார்க்கும்போது, உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ அதைப் பாருங்கள். மற்றவர்களுக்குத் தோன்றுபவைகளை நீங்கள் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

நீங்கள் கவனிக்கிறவைகளே, நீங்கள் பார்க்கிறவைகள். பயம் என்னும் திரையும், மற்றவர்களுடைய கணிப்பின் பாதிப்பும், தப்பெண்ணங்களின் மேக மூட்டமும் இல்லாமல் வாழ்க்கையையும், பொருட்களையும் மற்றவர்களையும் உங்கள் சொந்த கண்ணோட்டத்தில் நோக்குங்கள்.

வாக்குவாதம் செய்வதற்குப் பதிலாக, மற்றவர்களை காரியத்தை உற்றுநோக்க மற்றவர்களுக்கு அறிவுறுத்துங்கள். காரியத்தை உற்று நோக்க வற்புறுத்துவதால், மாயத் தோற்றப் பொய்களை உடைக்க முடியும் மகா நடிகர்களின் பாசாங்குகளை அம்பலப்படுத்த முடியும்; மிகச் சிக்கலான புதிர்களை விடுவிக்க முடியும்; மிக முக்கியமான கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்க முடியும்.

காரியங்கள் மிகக் குழப்பமாய், சகிப்பதற்குக் கடினமாய், கை மீறி, ஒருவருடைய ஞானம் முழுகி சுழன்றடிக்கப்படும் பொழுது, அந்நபரை சற்று ஆசுவாசப்படுத்தி, பின்பு காரியத்தை உற்று நோக்கச் செய்யுங்கள். அவர்கள் காண்கிறவைகள் அவர்களுக்கு மிகத் தெளிவாய் இருக்கும். அதன்பின் அவர்கள் அப்பிரச்சனையை அவர்கள் எளிதாகக் கையாள முடியும்.

அவர்களுடைய பிரச்சனைகளை அவர்கள் உற்றுப் பார்த்து கணிக்கத் தவறும் போது, அவர்களுக்காக எவர் கணித்தும், எத்தகைய ஆலோசனைகள், வழிகாட்டுதல்கள், பயமுறுத்தல்கள் செய்தும் பிரச்சனையைத் தீர்க்க அவைகள் அவர்களுக்குப் பயன்பட மாட்டாது.

எத்திசையில், எக்கோணத்தில் பார்க்கவேண்டும் என்று ஒருவருக்கு வழிகாட்டலாம். பார்ப்பதற்கு அவர்களுக்கு எடுத்துச் சொல்லலாம். ஆனாலும் பாப்பதின் முடிவுகள் அவருடையவைகளே.

40. பயிற்சி: ஒரு திறமையை வளர்க்க அல்லது மெருகுட்ட அப்பியாசம் அல்லது திரும்ப திரும்ப செய்தல்.

ஒரு குழந்தையானாலும் அல்லது வயது வந்தவர்களானாலும், தாங்களே தங்களுக்காகப் பார்க்கிறார்கள். அவர்கள் பார்ப்பதே அவர்களுக்கு நிஜம்.

உண்மையான திறமை, சரியாகப் பார்க்க ஒருவர் பெற்றிருக்கும் ஆற்றலை சார்ந்திருக்கிறது. அத்திறமை இருக்கிறவர்களே நிச்சயமும், உறுதியும் கொண்டிருக்க முடியும்.

17-2. கற்றுக்கொள்ளுங்கள்.

உங்களைக் குறித்துப் பொய்யான தகவல்களை மற்றவர்கள் எப்பொழுதாவது கொண்டிருந்தார்களா? அது உங்களுக்கு வருத்தம் தந்ததா?

பொய்யான தகவல்கள் உண்டாக்கக் கூடிய புயலைக் குறித்து நீங்கள் கொஞ்சம் விளங்கியிருப்பீர்கள். மற்றவர்களைப் பற்றிய பொய்யான தகவல்களை நீங்களும் கொண்டிருக்கக்கூடும்.

உண்மையான தகவல்களிலிருந்து பொய்யான தகவல்களைப் பகுத்து, பிரித்து எடுக்கும் போது நல்ல புரியும் ஆற்றல் கிடைக்கிறது.

ஏராளமான பொய்த்தகவல்கள் நம்மை சூழ்ந்து உள்ளன. தீய எண்ணங்கொண்டோர் தங்கள் சுய லாபங்களுக்காக அவைகளைப் பரப்புகிறார்கள். சில பொய்யான தகவல்கள், உண்மைகளை அறியாததின் அடிப்படையில் உருவாகின்றன. பொய்யான தகவல்கள் ஒருவர் உண்மையான தகவல்களைப் பெறுவதைத் தடுத்து விடுகின்றன.

கற்றுக்கொள்ளுதலின் முக்கிய பகுதி, கிடைத்த தகவல்களை சோதிப்பதும், உண்மையான தகவல்களைப் பிரித்து, அதில் முக்கியமான, முக்கியமற்றத் தகவல்களை வகைப்படுத்துதலும், அதன் பின் செயல்படுத்தக் கூடிய முடிவுகளை எடுப்பதுமாகும். ஒருவர் இம்முறையை செயல்படுத்துவாரானால், திறமையானவராக மாறும் வழியில் முன்னேறுகிறார் எனலாம்.

எந்த "உண்மை"யையும் நீங்கள் பரிசோதிக்கும் விதம், உங்களுக்கு அது உண்மையானதா என்று பார்ப்பதே. ஒருவருக்கு மொத்த தகவல்களும் கிடைத்தவுடன், அதில் தனக்கு விளங்காத தகவல்கள் இருந்தால் அவற்றை நீக்கி, எஞ்சிய தகவல்களைக் கணிக்க வேண்டும். அதன்பின்பும் அது உங்களுக்கு உண்மையாகத் தோன்றாவிட்டால் அது உங்களுக்கு உண்மையற்றதே. அதைத் தள்ளி விடுங்கள். நீங்கள் விரும்பினால் கூடுதலாக அதை சோதித்து உண்மையை புரிந்துக்கொள்ளுங்கள். ஏனெனில் நீங்களே அவ்வுண்மையை உபயோகிக்கவும், உபயோகிக்காமல் இருக்கவும், சிந்திக்கவும் சிந்திக்காமலும் இருக்கப் போகிறவர். ஒருவர் மற்றவர்கள் சொல்வதினால்,

"தகவல்களை உண்மை என்றும் பொய் என்றும்" ஏற்றுக் கொள்வாரானால் அவருடைய முடிவு துக்ககரமானதாக இருக்கக் கூடும். மற்றவர் முடிவுகளை அப்படியே தன் முடிவாக ஏற்றுக் கொள்வது திறமை இன்மை எனும் குப்பைத் தொட்டிக்குள் செல்லும் குறுக்கு வழியாகும்.

கற்றுக் கொள்ளுதலின் மற்றொரு பகுதி காரியங்களை ஞாபகத்தில் பதித்தலாகும். வார்த்தைகளின் எழுத்து கூட்டல், கணித வாய்ப்பாடுகள், விதிகள் மற்றும் மின் இயந்திரங்களில் பொத்தான்களின் வரிசையைப் போன்று காரியங்களை மனதில் பதிக்க வேண்டும். ஆனாலும் ஒரு சிறிய மனப்பாடத்தில் கூட, ஒவ்வொன்றும் எதைக் குறிக்கின்றன, அவற்றை எப்படி, எப்பொழுது உபயோகிக்க வேண்டும் என்றும் அறிந்திருக்க வேண்டும்.

கற்றுக் கொள்ளும் முறையானது தகவல்களுக்கு மேல் தகவல்களைக் குவிப்பதன்று. காரியங்களை புதிய விதத்தில் புரிந்து கொள்ளுதலும், மேலும் சிறப்பான வழிகளில் செய்ய அறிதலுமே கற்றுக் கொள்ளுதலின் முறையாகும்.

வாழ்க்கையில் முன்னேறுபவர்கள் கற்பதையும் படிப்பதையும் ஒருபோதும் நிறுத்துவது கிடையாது. திறமையான பொறியாளர் சமீபத்திய புது முறைகளைப் படித்தறிகிறார். நல்ல விளையாட்டு வீரன் தனது விளையாட்டின் வளர்ச்சியை தொடர்ந்து பரீசிலனை செய்கிறான். எந்த துறை நிபுணனும் தன்துறைப் புத்தகங்களை தன்னுடன் வைத்து அவைகளின் ஆலோசனைகளைக் கேட்டறிகிறான்.

புதுவரவு முட்டை அடிப்பானும், சலவை இயந்திரமும், இவ்வருடம் அறிமுகமான வாகனமும் திறமையாக இயக்கப்படுவதற்கு அவைகளின் இயக்கம் பற்றிய அறிவும், பயிற்சியும் அவசியமாகின்றது. மக்கள் அவ்வறிவை அலட்சியம் செய்யும் போது சமையலறையில் ஆபத்துகளும், நெடுஞ்சாலையில் இரத்தம் சிந்தும் கோர விபத்துகளும் நடக்கின்றன.

வாழ்வில் கற்கவேண்டியது இதற்கு மேல் ஒன்றுமில்லை என்று மிகவும் அகங்காரங் கொண்ட மனிதனே நினைக்க முடியும். தன்னுடைய தவறான முன் முடிவுகளையும், தவறான தகவல்களையும் விட்டுவிட்டு தங்கள் வாழ்க்கைக்கும் பிறர் வாழ்க்கைக்கும் உதவக்கூடிய உண்மையையும், சரியான தகவல்களையும் ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள், தங்களை சுற்றியுள்ள நிஜத்திற்கு ஆபத்தான நிலையில் குருடராகிப் போனவர்கள்.

படிப்பதில் பல வழிகள் உள்ளன. அவற்றின் நோக்கம் கற்றுக் கொள்ளுதலும், கற்றவற்றை பயன்படுத்தும் திறமை பெறுதலுமே. தாங்கள் படிப்பிப்பது என்ன என்று விளக்கும் ஒரு கருவியாக ஆசிரியரோ அல்லது பாட புத்தகமோ உள்ளது. படிப்பவருக்குப் புரியாத ஒவ்வொரு காரியமும், விளங்க வைக்கப்படுகிறது. அதனோடு தொடர்புடைய பல மேற்கோள்களோ அல்லது சம்பவம் ஒன்றின் காட்சியோ படிப்பவர் முன் வைக்கப்படுகிறது. தற்போது அவருக்கு சரியாகப்படும் தகவல்களின்

அடிப்படையில், முன்னதாக அவரிடம் உள்ள தவறான தகவல்கள் சலிக்கப்படுகின்றன. படித்ததின் நிச்சயமும் திறமையாக வளரும் வாய்ப்பும் இம்முறை படிப்பின் விளைவாக உண்டாகிறது. உண்மையில் இவ்வகைப் படிப்பு பிரகாசமும், பயனுள்ளதுமான அனுபவமாகும்.

இவ்விதப் படிப்பு முறை ஆபத்துகள் நிறைந்த மலையில், புதர்களுக்கிடையில் நடந்து ஏறுவதைப் போல் இல்லாமல், மலையுச்சியில் நின்று பரந்த முழு உலகைப் பற்றிய புதிய காட்சியின் பார்வையைப் பெறுவது போன்றதாகும்.

ஒரு நாகரீகம், தான் அழியாமல் இருக்க, தன் கல்விக் கூடங்களில் கற்பதின் திறமைகளையும், பழக்கங்களையும் வளர்க்க வேண்டும். குழந்தைகள் தங்களுக்குத் தொந்தரவாக இராதபடிக்குப் பெற்றோர்கள் குழந்தைகளை அனுப்பும் இடம் அல்ல கல்விக் கூடங்கள். அக்காரணத்திற்காகப் பெற்றோர் இவ்வளவு அதிகமாக செலவழிக்க வேண்டியதில்லை. சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளைகளை உருவாக்கும் இடம் கல்விக் கூடமல்ல. கற்பது எப்படி என்று படித்துக் கொடுத்து, வாழ்வில் நிஜம் என்ன என்பதை பற்றிக் கொள்ள குழந்தைகளை ஆயத்தப்படுத்துவதும் கல்விக் கூடங்களாகும். தங்களுடைய நடுத்தர அல்லது முதிர்வயதில் இருக்கும் உலகை ஆளவும், நிஜத்தை திறமையுடன் கையாளவும் இன்றைய இளைஞருக்குக் கற்பிப்பதும் கல்விக் கூடமாகும்.

கல்மனம் கொண்ட குற்றவாளிகள், கற்பது எப்படி என்று படிக்க வில்லை. குற்றம் செய்தால் மறுபடியும் சிறைக்குப் போக வேண்டியிருக்கும் என்று நீதி மன்றங்கள் பல தடவை அவர்களுக்குக் கற்பிக்க முயலுகின்றன. ஆனாலும் அவர்களில் அநேகர் அதே குற்றத்தை திரும்பவும் செய்து மறுபடியும் சிறைச்சாலை செல்கின்றனர். குற்றவாளிகள் நிமித்தமே அநேக புது சட்டங்கள் இயற்றப்படுகின்றன. நல்ல குடிமக்களோ சட்டத்திற்குக் கீழ்ப்படிகிறார்கள். குற்றவாளிகளோ சட்டத்திற்குக் கீழ்ப்படிகிறதில்லை. குற்றவாளிகளுக்கு கற்பது இயலாது. படிக்கவும், கற்றுக் கொள்ளவும் இயலாத ஒரு மனிதனை கட்டளைகளும் உத்தரவுகளும், தண்டனைகளும், பயமுறுத்தல்களும் திருத்த மாட்டாது.

சரித்திரத்தில் சில சமயங்களில் நேரிட்டது போல, அரசாங்கங்கள் கொடுங்கோல் ஆட்சிகளாக மாறும் போது அதன் தலைவர்களால் கற்க இயலாமற் போகிறது. அடக்குமுறை ஆட்சிகளை அழிவு தொடரும் என வரலாற்று சான்றுகளும் நல்லறிவும் எடுத்துச் சொல்லியும் அவர்கள் கற்றுக் கொள்ள இயலவில்லை. வன்மையான புரட்சிகளே அவர்களுடைய கொடுங்கோல் ஆட்சிகளுக்கு முடிவு கட்டியுள்ளன. ஹிட்லரின் ஆட்சி இரண்டாம் உலகப்போரினாலேயே அகற்றப்பட்டது. அவைகள் மனித குலத்தின் மிக துக்கரமான சம்பவங்கள். இப்படிப்பட்ட தலைவர்கள் பாடம் படிப்பதில்லை. அவர்கள் தவறான தகவல்களைக் கொண்டு தங்களை வஞ்சிக்கிறவர்கள். எல்லா ஆதாரங்களையும் உண்மையையும் நோக்க மறுத்து விட்டார்கள். அவர்களை அழித்து அகற்ற வேண்டியதாயிற்று.

புத்தி சுவாதீனமற்றவர்கள் கற்க இயலாது. புதைந்து கிடக்கும் தீய

எண்ணங்களால் இயக்கப்பட்டோ அல்லது நியாயத்தை அறியும் திறமை அற்று

இருப்பதனாலோ நிஜங்களும், உண்மையும் அவர்களுக்கு எட்டாதவைகளாய் இருக்கின்றன. அவர்கள் தவறான தகவல்களின் உருவமாய் இருக்கிறார்கள். கற்பதோ கிரகிப்பதோ அவர்களுக்கு இயலாது.

கற்க இயலாமையினாலோ அல்லது மறுப்பதினாலோ, தனிப்பட்ட நிலையிலும் சமுதாய அளவிலும் ஏராளமான பிரச்சனைகள் உருவாகின்றன.

உங்களைச் சுற்றியுள்ள சிலரின் வாழ்க்கை தடம் புரண்டு போய்விட்டது. எப்படி கற்பது என்பதை படிக்காததினால் அறியாமல் போனதுமே அதற்குக் காரணம். சில உதாரணங்களை நீங்கள் நினைவு கூறக் கூடும்.

தன்னைச் சுற்றியுள்ளவர்களை படிக்கவும், கற்கவும் செய்யாவிட்டால், ஒருவருடைய வேலை கடினமானதாகவும், கூடுதல் சுமை உடையதாகவும் மாறக் கூடும். அவருடைய நீடித்த வாழ்வின் வாய்ப்பு மிகவும் குறையக் கூடும். சரியான தகவல்கள் ஒருவருக்கு எட்டக்கூடிய அளவில் கிடைக்கச் செய்வதின் மூலம், கற்கவும் படிக்கவும் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்யமுடியும். ஒருவர் படிப்பதை பாராட்டுவதின் மூலம் மேலும் படிப்பதற்கு அவரை உற்சாகப்படுத்த முடியும். திறமையில் ஏற்பட்ட சிறு வளர்ச்சி வெளிப்பட்டதை பாராட்டுவது மூலம் ஒருவர் மற்றவருக்கு உதவ முடியும். ஒருவருக்கு விருப்பமானால் அவர் இதற்கும் கூடுதலாக மற்றவர்களுக்கு உதவ முடியும். தர்க்கமின்றி, பொய்யான தகவல்களைப் பிரித்தெடுக்க மற்றவர்களுக்கு உதவலாம்.

அவர்களுக்குப் புரியாத வார்த்தைகளைக் கண்டுபிடித்து அர்த்தம் காண உதவலாம். அவர்கள் படித்து கற்றிராத நியாயங்களைக் கண்டு பிடித்து கைக்கொள்ள உதவலாம்.

வாழ்க்கை பெரும்பாலும் விழுந்து எழும் அனுபவத்தின் அடிப்படையிலானதினால் தவறு செய்பவர்கள் மேல் கடுமையைக் காட்டாமல், அத்தவறு எப்படி உண்டானது என்றும் அத்தவறிலிருந்து மற்றவர்கள் என்ன பாடம் படிக்கக்கூடும் என்பதையும் கண்டுபிடிக்க வேண்டும்.

ஒரு நபரை படிக்கவும் கற்கவும் வைப்பதினால் அவருடைய வாழ்க்கைச் சிக்கல்களிலிருந்து அவர் மீள்வதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். கற்றுக் கொடுக்க அநேக வழிகளை நீங்கள் யோசிக்கக்கூடும். மென்மையான வழிகள் சிறப்பாக செயல்படுகின்றன என்பதை நீங்கள் காண்பீர்கள். படிக்க இயலாதவர்களிடம் உலகம் ஏற்கெனவே மிருகத்தனமாய் நடந்து கொண்டிருக்கிறது.

17-3. பயிற்சி.

படித்ததை செயல்படுத்தும் போது படித்தது பலன் தருகிறது. ஞானத்தை

ஞானத்திற்காகவே ஒருவர் தேடக் கூடும். அதிலும் ஓர் அழகு உள்ளது. ஆனால் உண்மை என்னவென்றால், ஒருவன் தன் ஞானத்தை செயல்படுத்துவதினால் உண்டாகும் விளைவைக் காணுமுன்னால், தான் ஞானியோ அல்லவோ என்று அறியமாட்டான்.

எந்த ஒரு செயலும், திறமையும், தொழிலும் அது குழி தோண்டுதலாயினும், சட்டம் உரைத்தலாயினும், பொறியியலாயினும், சமையலாயினும், எத்தொழிலாயினும், எவ்வளவு நன்றாகக் கற்றிருந்தாலும் ஓர் இறுதி சோதனையைக் கடந்து செல்ல வேண்டும். ஒருவர் தன் வேலையைச் செய்ய முடியுமா? என்பதே அச்சோதனை. ஒருவர் தன் வேலையைச் செய்வதற்குப் பயிற்சி தேவை.

பயிற்சி செய்யாது சண்டையிடும் திரைப்படத் தொழிலாளிகள் முதலாவது காயம் அடைகிறார்கள். அது போலவே குடும்பத் தலைவிகளும் வேலையில் பயிற்சி இல்லாமல் சமையற்கட்டில் காயத்திற்குள்ளாகிறார்கள். சுய பாதுகாப்பு என்பது அநேகர் விரும்பும் பாடமல்ல. ஏனெனில் "ஜாக்கிரதையாயிரு," "மெதுவாகப் போ" என அது கற்றுக் கொடுப்பதே காரணம். தங்கள் மீது கடிவாளம் போடப் படுவதை மக்கள் அறிகிறார்கள். அது அவர்களுக்குப் பிரியமல்ல. ஆனால் மற்றொரு வகை சுயபாதுகாப்பு பாடம் உள்ளது. ஒருவர் முறையாகப் பயிற்சி செய்தால் அவருடைய திறமையும், செயல்பாடும் சிறப்பாக இருப்பதால், "ஜாக்கிரதையாயிரு" "மெதுவாகப் போ". என்ற கட்டளைகள் அவருக்கு அவசியமல்ல. தொடர் பயிற்சியினால் விரைவான இயக்கம் பாதுகாப்பு உடையதாக அமைகிறது.

ஒருவருடைய திறமையும் செயல் வளர்ச்சியும் அவர் வாழும் உலகின் வேகத்திற்கு ஈடாக வளர்க்கப்பட வேண்டும். பயிற்சியினாலேயே அது சாத்தியமாகும்.

ஒருவர் பயிற்சியினால், கண்களை, கைகளை, கால்களை, சரீரத்தை ஒருவகை "அறிவுள்ளவைகளாக" மாற்ற முடியும். பயிற்சி பெற்ற ஒருவர் அடுப்பை பற்ற வைப்பது எப்படி என "சிந்திக்க" வேண்டியதில்லை. வாகனத்தை நிறுத்துமிடத்தில் வாகனத்தை நிறுத்துவது எப்படி என யோசிக்க வேண்டியதில்லை. அவைகளைத் திட்டமிடாமலே தானாகச் செய்கிறார். எந்தவொரு செயலிலும் "தனித்திறமை" என்றழைக்கப்படுவது பெரும்பாலும் வெறும் பயிற்சியே.

ஒரு செயலின் ஒவ்வொரு பகுதி அசைவையும் கற்றுக் கொள்ளாமலும், அச்செயலை மறுபடியும் மறுபடியும் செய்து, அனிச்சையாகவும், அச்செயலை வேகமாகவும், துல்லியமாகவும் செய்யும் ஆற்றலைப் பெறாமலும், அச்செயலை ஒருவர் செய்யும் பொழுது விபத்துக்கான வாய்ப்பினை உருவாக்குகிறார்.

குறைவான பயிற்சி உடையவர்களே அதிக விபத்துக்களை உண்டாக்குகிறார்கள் என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதன் அடிப்படையிலேயே, அறிவை சிறப்பாக உபயோகிக்கும் கைவினைத் தொழில்களும், பிற தொழில்களும் செயல்படுகின்றன. நீதிமன்ற வாதங்களில்

பங்கேற்று, அதன் நடைமுறை அனுபவத்தில் வல்லவராகாத வழக்கறிஞர், வாதத்தில்

திடீரென ஏற்படும் திருப்பத்தை சமாளிக்க இயலாமல், தன் வழக்கில் தோற்றுப் போகிறார். நன்கு பழக்கமற்ற பங்குச்சந்தை தரகர் சில நிமிடங்களில் பெருஞ் செல்வத்தை நஷ்டப்படுத்துகிறார். புதிதாகப் பணி ஏற்ற விற்பனை பிரதிநிதி, விற்று அனுபவமில்லாமையால் பட்டினி கிடக்க நேரிடுகிறது. இவற்றுக்கெல்லாம் தீர்வான பதில் பயிற்சி, பயிற்சி, பயிற்சியே.

சில வேளைகளில், தான் கற்றது அப்பியாசிக்க முடியாதது என ஒருவர் காணக்கூடும். அப்படியானால் தவறு அவர் சரியாகப் படிக்ககாததிலும் அல்லது அவரது ஆசிரியர் சரியாகப் படித்துக் கொடுக்காததிலும் அல்லது தவறான பாடப்புத்தகத்தை படித்ததிலுமாயிருக்கக் கூடும். ஒரு செயலின் வழிமுறைகளை வாசிப்பதும், அவைகளை அப்பியாசிக்க முற்படுவதும் முற்றிலும் மாறுபட்ட காரியங்கள்.

சில வேளைகளில் போதுமான பயிற்சிக்குப் பின்னும் செயல் கடினமானால் அப்புத்தகத்தை தூர எறிந்து விட்டு மறுபடியும் புதிதாக ஆரம்பிக்க வேண்டும். திரைப்படத்துறையில் ஒலிப்பதிவின் புத்தகங்களைப் பின்பற்றினால், ஒரு பறவையின் பாடல் கப்பலின் ஒலிப்பான் எழுப்பும் கனத்த ஓசைக்கு ஒப்பாகவே பதிவாகும். சில திரைப்படங்களில் நடிகர்கள் பேசுவது விளங்காதிருப்பதற்கு புத்தகத்தைப் பின்பற்றிய ஒலிப்பதிவுகளே காரணம்.

ஒரு நல்ல ஒலிப்பதிவாளன் தனது வேலையைத் திறம்பட செய்ய எல்லாவற்றையும் தானே நிர்ணயிக்க வேண்யதுள்ளது. ஆனால் அதே திரைப்படத்துறையில் இதற்கு நேர்மாறான காரியமும் உள்ளது. ஒளிப்பதிவைக குறித்து மிகச் சிறந்த புத்தகங்கள் உள்ளன. சரியாகப் பின்பற்றினால் மிக அழகான காட்சிகளை ஒளிப்பதிவாக்க முடியும்.

தொழில் நுட்பம் நிறைந்த அதிவேக சமுதாயத்தில், புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அதின் அனைத்து செயல்பாடுகளும் புத்தகங்களினால் போதுமான அளவு உள்ளடக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்கது. இவ்வுண்மை ஒருவரை எவ்விதத்திலும் தடுக்கலாகாது. நல்ல புத்தகங்கள் இருக்கும்பொழுது அவற்றை உயர்வாக எண்ணி நன்கு படியுங்கள். நல்ல புத்தகங்கள் இல்லாத பட்சத்தில், கிடைக்கக் கூடிய தகவல்களைத் திரட்டி, அவைகளைப் படித்து வேலையைத் தொடர்ந்திடுங்கள்.

பாடங்களும், தகவல்களும் பயிற்சியினால் அப்பியாசிக்கப் படுவதினாலேயே வளரக்கூடும்.

ஒருவரைச் சுற்றியுள்ளவர்கள் ஒரு செயலைச் செய்ய இயலும் அளவு பயிற்சியற்றவர்களாயிருக்கும் போது அந்நபர் ஆபத்திலிருக்கிறார். "போதுமான அளவு திறமையுடையவர்" என்பதற்கும், தொழில் ரீதியாகத் தேர்ச்சியும் அனுபவமும் உடையவர் என்பதற்கும் இடைவெளி அதிகம். பயிற்சியினால் அந்த இடைவெளியைக் குறைக்கலாம்.

பார்த்து, படித்து, பயிற்சி செய்து ஒரு செயலை செய்ய மக்களிடம் சொல்லுங்கள். அவர்கள் அதைச் சரியாகப் புரிந்து கொண்ட பின், தொழில் ரீதியான திறமை பெறும் வரை கடின பயிற்சியில் ஈடுபடச் செய்யுங்கள்.

திறமையிலும், செயல் வன்மையிலும், வேகத்திலும் பெரிதான மகிழ்ச்சி உள்ளது. பயிற்சியால் மாத்திரம் பாதுகாப்பாய் செயல்பட முடியும். அதிவேக உலகில் மெதுவாக செயல்படும் மக்களுடன் வாழ்வது அதிக பாதுகாப்பானதல்ல.

சமர்த்துத் தோழர்களுடனே மகிழ்ச்சியின்
வழியில் உன்னத பயணம்.

18. பிறரது சமய நம்பிக்கைகளை மதியுங்கள்

மனித உறவுகளைக் கட்டுவதற்கு சிறந்த மூலைக்கல் மதசகிப்புத் தன்மையே.

சரித்திரத்திலும், தற்காலத்திலும், மதசகிப்பு அற்ற தன்மையினால் விளைந்த வன்கொலைகளையும், பாடுகளையும் ஒருவர் பார்க்கும்போது, மதசகிப்பு அற்ற தன்மை, நீடித்த வாழ்க்கையின் நிச்சயத்தை அச்சுறுத்தும் மிக மோசமான செயல் என்று அறிய முடியும்.

மதசகிப்புத் தன்மை என்பது ஒருவர் தன்னுடைய நம்பிக்கைகளைக் குறித்து வெளிப்படையாக ஒருவர் பேசக் கூடாது என்பதல்ல. மற்றவருடைய மத நம்பிக்கையையும், கொள்கைகளையும் அற்பமாக எண்ணி, குறை கூறுதல் என்பதே மதசகிப்பு அற்ற தன்மையின் விளக்கமாகும்.

கலகங்களுக்கு மிக சுலபமான வழி மத சகிப்பற்றத் தன்மை ஆகும். பண்டைய கிரேக்க காலத்திலிருந்து, தத்துவ ஞானிகள் அனைவரும் ஒருவரோடொருவர் கடவுள், மனிதன் மற்றும் பிரபஞ்சம் ஆகியவற்றின் தன்மையைக் குறித்து தர்க்கவாதம் செய்து வந்திருக்கின்றனர். கருத்துகள் பலவும் சில காலம் வலுவாய் இருந்து, பின் நலிவடைந்து போயிருக்கின்றன. தற்காலத்தில் பெரிதாகப் பேசப்படும் தத்துவக் கொள்கைகளான "சடப்பொருளின் இயக்கமே"[41] என்ற கொள்கையும், "பொருண்மை"[42] என்ற கொள்கையும், கருத்து அடிப்படையில் எகிப்து கிரேக்க காலந்தொட்டவை என்பது உண்மை. எல்லாம் சடப் பொருள் என்று நிரூபிக்க பரிணாம வளர்ச்சியைப் பற்றிய விளக்கங்களை முன் வைக்கின்றனர். பரிணாமத்திற்கும் கூடுதலான காரணிகள் இயற்கையில் செயல்படக் கூடும் என்றும், அக்காரணிகள் பரிணாமத்தை ஒரு

41. சடப்பொருள் இயக்கம்: சடப் பொருளின் இயக்கமே உயிராகும். உயிரின் காரியங்கள் எல்லாம் இயற்பியல் விதிகளுக்குட்பட்டவை. இக்கருத்து கி.மு. 460 கி.மு. 370 ஆண்டுகளுக்குள் லூசிப்பஸ் மற்றும் டெமாக்கிரிடஸ் என்பவர்களால் முன் வைக்கப்பட்டது. இக்கருத்தை அவர்கள் எகிப்திய புராணங்களிலிருந்து பெற்றிருக்கக் கூடும். இத்தத்துவத்தை முன் நிறுத்துபவர்கள் மதங்களை கணிதத்தின் வடிவில் மாற்றக் கூடாதாகையால் அவைகளை உதாசீனப்படுத்த வேண்டும் என நினைத்தனர். மதங்களைச் சார்ந்தோர் இவர்களையும் இவர்கள் பதிலுக்கு மதங்களைச் சார்ந்தோரையும் தாக்கினர்.

42. பொருண்மைக் கொள்கை: மிகப் பெரிய அல்லது மிகச் சிறிய கற்கள் போன்ற கடினமான பொருள்களால் ஆனது என்பதே. அண்டசராசரத்தைப் பற்றிய இவர்களுடைய கொள்கை மனம் போன்றவைகள் ஜடப் பொருள்களாகவோ அல்லது அவைகளின் இயக்கமாகவோ விளக்கப் பட முடியும். என்று இக்கோட்பாடுகள் விளக்க முற்படுகின்றன. இக்கொள்கை மிகப் பழங்காலத்து சிந்தனையாகும். உலகில் வேறு பல சிந்தனைகளுமுண்டு.

கருவியாகப் பயன்படுத்தியிருக்கக் கூடும் என்றும் தங்கள் தத்துவத்திலேயே, தாங்கள் ஒப்புக் கொள்வதை மறந்துவிட்டு, எல்லாம் பொருண்மை மற்றும் சடப்பொருளின் இயக்க விளைவே என்று உறுதிபடுத்த விளைகின்றனர். இவைகள் தான் இன்றைய உலகில் "அங்கிகரிக்கப்பட்ட" தத்துவங்கள். பள்ளிகளில் கூட இத்தத்துவங்கள் பயிற்றுவிக்கப் படுகின்றன. இக்கொள்கை வெறியர்கள் மற்றவர்களது மதங்களையும் நம்பிக்கைகளையும் கடுமையாகத் தாக்குகின்றனர். இதன் விளைவாக சகிப்பற்ற தன்மையும் ஒருவரை ஒருவர் விரோதித்தலும் உண்டாகின்றன.

கி.மு ஐந்தாம் நூற்றாண்டு முதல் வாழ்ந்த, கல்வியிலும், ஞானத்திலும் மிகச் சிறந்த அறிஞர்களால் கூட மதத்திற்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ, ஒருவரோடொருவர் கருத்துகளில் ஒன்றுபட முடியவில்லை.

சாமான்ய மக்கள் அனைவரும் இத்தத்துவங்களில் தலையிடாமல் விலகியிருத்தலே நலமானது. மக்கள் ஒருவரையொருவர் விரோதிக்கச் செய்யும் தளங்கள் இவை.

கடல்அலை போன்ற எண்ணற்ற தத்துவ தர்க்கங்களிலிருந்து ஒரு தெளிவான, வெளிச்சம் கொள்கையாக உதிக்கிறது. ஒருவர் தன் விருப்பப்படி தான் பின்பற்ற வேண்டிய கொள்கையை தெரிந்து கொள்ளலாம் என்பதே அது. "விசுவாசமும்" "நம்பிக்கையும்" தர்க்க சாஸ்திரத்திற்கு இசைந்தவை அல்ல.

தர்க்க சாஸ்திரத்துடன் ஒத்தவை அல்ல என்பதினால் அவை தர்க்கசாஸ்திரத்திற்கு எதிரானவை என்று கூறி விட முடியாது. அவைகள் ஒன்றொடொன்று தொடர்புபடுத்த முடியாத வித்தியாசமான காரியங்கள்.

தான் நம்புவதற்கு, தனது மனதிற்குப் பிடித்தமான கொள்கைகளை ஒருவர் தெரிந்து கொள்ளலாம் என்பதே இவ்விவகாரத்தில் கொடுக்கக் கூடிய பாதுகாப்பான ஆலோசனை. தன் நம்பிக்கைகளை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி அவற்றைப் பற்றி பேச ஒருவர் சுதந்திரம் பெற்றிருக்கிறார். அவர் மற்றவர்களுடைய நம்பிக்கைகளை ஒருவர் தாக்கிப் பேசும் போதோ ஆபத்திற்குள்ளாகிறார். அதிலும் ஒருவருடைய மத நம்பிக்கையைத் தாக்கிப் பேசி, அவர்களுக்குத் தீங்கு செய்ய முற்படும் போது அதிக ஆபத்திற்குள்ளாகிறார்.

ஆதிகாலந்தொட்டே மனிதன் மதங்களில் ஆறுதலும் மகிழ்ச்சியும் கண்டுள்ளான். "நாத்திகக் கொள்கையைக்" கொண்ட இக்காலத்தவரும் முற்காலத்தில் தங்கள் மதக் கொள்கைகளைப் பரப்பிய போதகர்களைப் போலவே சகிப்புத்தன்மையற்று காணப்படுகின்றனர்.

விசுவாசம், நம்பிக்கை அற்ற மனிதர்கள் பரிதாபமானவர்களாய்க் காணப்படுகின்றனர். தங்கள் நம்பிக்கையை வைக்க அவர்களுக்கு ஏதாகிலும் கொடுங்கள். அவர்களுக்கு மத நம்பிக்கைகள் இருக்குமானால் அவற்றை மதியுங்கள்

பிறரது சமய நம்பிக்கைகளை மதிக்கத் தவறும் போது
மகிழ்ச்சியின் வழி போராட்டக் களமாக மாறக் கூடும்.

19. மற்றவர்கள் உங்களுக்கு எதை செய்யக் கூடாதென்று விரும்புகிறீர்களோ அதை நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யாதிருங்கள்

"தங்க விதி"[43] எனப் பொதுவாக அழைக்கப்படும் கட்டளையானது, உலகின் பல நாடுகளில், பல இனமக்களிடையே, வெவ்வேறான காலகட்டங்களில் ஒன்றுக்கொன்று வழங்கி வந்திருக்கிறது. ஒன்றுக்கொன்று சிறிது மாறுபடும் வெவ்வேறு மொழி பெயர்ப்புகளைப் போன்று, மேலே கொடுக்கப்பட்டுள்ள தலைப்பும் தங்க விதியின் ஒரு வகை வெளிப்பாடுதான். இத்தலைப்பு துன்பம் தரும் செயல்களைக் குறிக்கிறது.

வாழ்நாள் முழுவதும் எவருக்கும் எத்தீங்கும் செய்யாமல் வாழ, ஒரு புனிதரால் தான் முடியும். ஆனால் தன்னைச் சுற்றியுள்ளவர்கள் தன்னால்படும் துன்பத்தைக் குறித்து சிறிதும் கவலைப்படாமல், அவர்களை வேதனைபடுத்துவது ஒரு கடினமான குற்றவாளியால் தான் முடியும்.

தீமையான செயலுக்குப் பின் உண்டாகும் "குற்ற உணர்வு", "நிந்தை", "உறுத்தும் மனசாட்சி" ஆகியவை நிஜமானதும், துயரம் தருவதுமாகும். மற்றவருக்கு செய்த தீமைகளும் செய்தவரை பற்றிப் பிடிக்கின்றன என்பதும் உண்மை.

எல்லா தீய செயல்களும் திரும்பப் பெறக் கூடியவை அல்ல. அலட்சியப்படுத்தவும், மறக்கவும் முடியாத தீய செயல்களை ஒருவருக்கு எதிராக மற்றவர் செய்ய இயலும். இதற்கு எடுத்துக்காட்டான ஒரு தீய செயல் மனிதக்கொலை. இப்புத்தகத்தில் காணப்படும் எந்த ஒரு அறிவுரையையும் துணிந்து மீறும்போது கொடிய, திரும்பப் பெற முடியாத தீச் செயல்கள் மற்றவருக்கு விரோதமாக விளையும் என்பதை ஒருவர் கண்டுகொள்ள முடியும்.

---

43 . "தங்க விதி விதி":: :: : கிரிஸ்தவர்கள் இச்சட்டம் கிரிஸ்தவத்திற்கு சொந்தமானது என்று எண்ணுகின்றனர். பழைய புதிய ஏற்பாடுகளில் இச்சட்டம் காணப்படுகிறது. ஆனாலும் இச்சட்டத்தை வேறு பல இனத்தவரும் மக்களும் கூறி இருக்கின்றனர். கிறிஸ்துவுக்கு முன் ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கான்பூசியஸின் பொன் மொழிகளில் இச்சட்டம் காணப்படுகிறது. கான்பூசியஸ் இச்சட்டத்தை புராணகாலங்களிலிருந்து மேற்கோளாகவே எடுத்துக் காட்டியுள்ளார். ஆதிவாசிகளின் காலத்திலும் காணப்பட்டுள்ளது. பிளேட்டோ, அரிஸ்டாட்டில், சாக்ரடீஸ் மற்றும் சினகா ஆகியோரது படைப்புகளில் அங்காங்கே காணப்படுகிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இச்சட்டம் சன்மார்க்க நடத்தையின் அளவுகோலாக மனிதர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இப்புத்தகத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள இச்சட்டத்தின் மொழியாக்கம் (மொழியாக்கங்கள்) புதிதான வார்த்தைகளால் அமைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இதற்கு முன் சென்ற வாசகங்கள் கடைபிடிப்பதற்கு மிகக் கடினமான வெறும் கொள்கைகள் என்று கருதப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் மொழியாக்கத்தை நீங்கள் கைக் கொள்ள முடியும்.

ஒருவர் மற்றவருடைய வாழ்வை அழிக்கும்போது, அவ்வழிவு, அழித்தவருடைய வாழ்க்கையையும் நொறுக்குகிறது. சமுதாயமும் அச்செயலுக்குப் பதிலளிக்கிறது. மற்றவர்களுக்குக் கொடுஞ் செயல் செய்தவர்களால் சிறைச்சாலைகளும் மனநலம் பாதிக்கப்பட்டோர் காப்பகங்களும் நிறைந்திருக்கின்றன. வேறு பல தண்டனைகளும் குற்றவாளியைத் தொடர்கின்றன. ஒருவர் மற்றவருக்கு சட்ட விரோதமாகக் கொடுஞ் செயல்களைப் புரியும் போது, அதின் விளைவுகளை அனுபவிக்க அவர் கண்டு பிடிக்கப்படவேண்டும் என்பது முக்கியமல்ல. குறிப்பாக ஒருவர் கண்டு பிடிக்கப்படாமல் இருக்கும் போது, தன்னையும் பிறரையும் குறித்த தன்னுடைய கண்ணோட்டத்தில் மோசமான மாற்றங்களைப் பெறுகிறார். அவைகள் எல்லாம் துன்பமயமானவைகளே. வாழ்வின் மகிழ்ச்சியும் களிப்பும் அற்றுப் போகின்றன.

"தங்க விதியின்" இம்மறுதலை, ஒரு பரீட்சையைப் போல உபயோகமாகிறது. இப்பரீட்சையை பரீட்சித்துப் பார்க்குமாறு ஒருவரைத் தூண்டும்போது கொடுமையான செயல்களின் உண்மை உருவத்தை அவர் காண்கிறார். காணும்போது தீமை செய்தல் என்றால் என்ன என்பதற்குப் பதில் அவருக்குக் கிடைக்கிறது. தீமைசெய்தல் பற்றிய தத்துவ சாஸ்திரக் கண்ணோட்டத்தில், எது தீமை என எழும்பும் தர்க்கத்திற்கு தனிப்பட்ட வாழ்விலிருந்து உடனே பதில் தர முடியும். "இச்செயல் உங்களுக்கு சம்பவிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா?" என்று கேட்கும் போது, "இல்லை," என பதில் வந்தால், 'இச்செயல்' தீங்கானது என அறியலாம். இச் செயல் சமுதாயத்தின் பார்வையில் தீமையான செயல் ஆகும். இக்கேள்வி சமுதாயத்தின் மனசாட்சியைத் தட்டி எழுப்பக் கூடியது. செய்யக் கூடியதும், செய்யத் தகாததுமான செயல்கள் எவை என வரையறுக்க ஒருவருக்கு இக்கேள்வி பெரிதும் வழி காட்டுகிறது. கட்டுப்பாடுகள் இல்லாமல் ஒருவர் தீமையான செயல்களைச் செய்யும்போது மற்றவர் தம் வாழ்வில் நீடித்திருக்கக் கூடிய வாய்ப்பு மிகவும் குறைகிறது.

இக்கேள்வியைக் கேட்பதற்கு, மக்களை நீங்கள் தூண்டுவீர்களானால், தங்களைத் தாங்களே மதிப்பிட்டுக் கொள்ளக் கூடிய ஒருவழியை அவர்களுக்கு காட்டுகிறவர்களாயிருப்பீர்கள். மற்றும் சிலருக்கு, மனித சமுதாயத்தில் நல்ல அங்கத்தினராக சேருவதற்கு திறந்த வாசலை முன்வைக்கிறவர்களாவீர்.

துன்பம் விளைவிக்கக் கூடிய கொடுஞ் செயல்களை
செய்வதிலிருந்து விலகி இராதவர்களுக்கு
மகிழ்ச்சியின் வழி மூடப்பட்டிருக்கிறது.

20. பிறர் உங்களை எப்படி நடத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களோ அவ்விதமாய் நீங்களும் பிறரை நடத்துங்கள்.

"தங்க விதியின்" நோமறைப் பதிப்பே இத்தலைப்பு ஆகும்.

"நல்லவராயிருங்கள" என்ற ஆலோசனையை சிலர் கசந்துகொண்டால் ஆச்சரியம் கொள்ளாதீர்கள். அவர்களுடைய கசப்பு "நல்லவனாயிருத்தல்" என்ற கருத்தின்மேல் இல்லாமலிருக்கலாம். நல்லவனாயிருத்தல் என்ற கருத்தின் பொருளை அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம்.

"நன்னடத்தையைக்" குறித்து ஏராளமான முரண்பட்ட அபிப்பிராயங்களும், குழப்பமான கருத்துகளும் நிலவுகின்றன. அவைகளுக்குள் ஒருவர் சிக்கிக் கொள்ளமுடியும். "நடத்தைக்காக" பள்ளியில் தனக்குக் கொடுக்கப்பட்ட தரம் குறிக்கும் பொருள் என்ன என்பது, தரம் கொடுத்த அவருடைய ஆசிரியருக்கு ஒருவேளை புரிந்திருந்தாலும், அவருக்கு ஒருக்காலும் புரியாமல் போகலாம். அவருடைய நடத்தைக்கான தரம் தவறாகக்கூட கொடுக்கப்பட்டிருக்கலாம். அல்லது தவறான அளவுகோலின் அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கலாம். "குழந்தைகள் சொல்வதை வைத்தல்ல, அவர்கள் செயலைப் பார்த்தே எடைபோட வேண்டும்", "தொந்தரவு செய்யாமல் இருந்தால் நல்ல குழந்தை" என்பன சில தவறான அளவுகோல்களுக்கு உதாரணங்கள்.

நன்னடத்தையைக் குறித்த அனைத்து குழப்பங்களையும் ஒருவருடைய முழு திருப்திக்கும் ஏற்க தீர்க்கும் வழி ஒன்றிருக்கிறது.

தொன்றுதொட்டு, உலகின் பெரும்பாலான இடங்களில், மனித இனம் சில இலட்சியத் தன்மைகளை மதிப்புள்ளவைகளாக எண்ணியும், பாராட்டியும் வந்துள்ளது. இத்தகைய இலட்சியத் தன்மைகள் நற்பண்புகள்[44] எனப்படுகின்றன. நற்பண்புகள் ஞானிகளுக்கும், முனிவர்களுக்கும், பரிசுத்தவான்களுக்கும், தேவர்களுக்கும் உண்டென்று கூறப்படுகிறது. காட்டுமிராண்டிக்கும் பண்பாளனுக்கும், குழப்பம் நிறைந்த சமுதாயத்திற்கும் ஒழுங்குள்ள சமுதாயத்திற்கும் உள்ள வித்தியாசத்தை நற்பண்புகளே உருவாககி உள்ளன.

44. நற்பண்புகள்: மனித நன்னடத்தையின் மிகச் சரியான குணாதிசயங்கள்.

"நல்லது" என்றால் என்ன என்று கண்டுபிடிக்கப் பரலோகத்திலிருந்து தீர்ப்போ, தத்துவ ஞானிகள் கட்டி வைத்துள்ள பிரம்மாண்டமான தத்துவக் கோபுரங்களினுள்ளே

ஆராய்ச்சியோ முற்றிலும் தேவையற்றது. இக்காரியத்தைப் பற்றிய சுய வெளிப்பாடு ஒருவருக்குக் கிடைக்க இயலும்.
ஏறக்குறைய அனைவரும் இக்காரியத்தில் உண்மையைக் கண்டுபிடிக்க முடியும்.

தன்னை மற்றவர்கள் எவ்வாறு நடத்த வேண்டும் என்று ஒருவர் சிந்தித்தால், மனித நற்பண்புகளுக்கு அவர் வடிவம் கொடுக்க முடியும். அவரது சிந்தனையின் கருத்துகள் மனித நற்பண்புகளின் பரிணாம வளர்ச்சியாய் காணப்படும். மற்றவர்கள் உங்களை எவ்விதமாய் நடத்துவதை நீங்கள் விரும்புவீர்கள் என்பதைப் பட்டியலிட்டுப் பாருங்களேன்!

மற்றவர்கள் உங்களை நியாயமாக நடத்த வேண்டும் என்று முதலாவதாக நீங்கள் விரும்பக்கூடும். மற்றவர்கள் உங்களைப் பற்றி பொய்யாய் பேசுவதை விரும்பமாட்டீர்கள். தவறாகவோ, கடுமையாகவோ உங்களை குற்றவாளியாகத் தீர்ப்பதை நீங்கள் விரும்ப மாட்டீர்கள் சரி தானே?

உங்கள் நண்பர்களும், சகவாசிகளும் உங்களுக்கு உண்மையாயிருக்க விரும்புவீர்கள். அவர்கள் உங்களைக் காட்டிக் கொடுப்பதை விரும்ப மாட்டீர்கள்.

வஞ்சகம் மற்றும் சதி எண்ணங்கள் இல்லாமல் நல்லெண்ணத்துடன் மற்றவர்கள் உங்களை நடத்த வேண்டும் என்று நீங்கள் விரும்பக் கூடும்.

உங்களிடம் செயல்பாடுகளில் மற்றவர்கள் நியாயமாய் நடக்க வேண்டும் என்று விரும்புவீர்கள்.

உங்களிடம் உண்மையாகவும், உங்களை வஞ்சிக்காமலும் இருக்க வேண்டும் என்று விரும்புவீர்கள, சரியா?

கடுமையாக இல்லாமல், கனிவோடு நடத்தப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்பலாம்.

உங்கள் உரிமைகளையும், உணர்வுகளையும் மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்று விரும்பக் கூடும்.

நீங்கள் சோர்ந்து போகும்போது மற்றவர்கள் உங்களிடம் மனதுருக்கமாய் இருக்க விரும்புவீர்கள். பிறர் உங்களை எடுத்தெறிந்து பேசாமல் மனக்கட்டுப்பாடுடன் நடந்து கொள்வதையே விரும்புவீர்கள்.

நீங்கள் குற்றங் குறைவுகள் உடையவர்களாயிருந்து தவறு செய்யும் போது கண்டிக்காமல் உங்களிடம் மற்றவர்கள் பொறுமை காட்ட நீங்கள் விரும்பக் கூடும்.

தண்டித்து தடைசெய்வதில் மனம் வைக்காமல் உங்களை மற்றவர்கள் மன்னிக்க வேண்டும் என்று விரும்புவீர்கள் சரியா?

கருமிகளாய் அல்லது அற்பமாய் நடவாமல் உங்களுக்குத் தாராளமாய் உதவுகிறவர்களாய் பிறர் இருக்க வேண்டும் என விரும்புவீர்கள்.

சந்தேகிக்கிறவர்களாயிராமல் உங்கள் மேல் மற்றவர்கள் எப்பொழுதும் நம்பிக்கையுடனிருக்க வேண்டும். கனவீனப் படுத்தாமல், மற்றவர்கள் உங்களை கனப்படுத்த வேண்டும் என விரும்புவீர்கள் சரி தானே?

பண்பு கலந்த மரியாதையுடன் பிறர் உங்களிடத்தில் நடக்க வேண்டும் என்று விரும்புவீர்கள். மற்றவர்களுக்காக நீங்கள் எதையாகிலும் செய்யும் போது மற்றவர்கள் அதைப் பாராட்ட வேண்டும் என்று விரும்புவீர்கள். சரியா?

பிறர் உங்களிடம் நட்புடன் இருக்க விரும்புவீர்கள்

சிலரிடமிருந்து நீங்கள் அன்பை விரும்பக் கூடும். அனைத்திற்கும் மேலாக, நீங்கள் விரும்பும் இக்காரியங்களில் மற்றவர்கள் உங்களிடம் நடிப்பதை விரும்ப மாட்டீர்கள். கண்ணியத்துடனும், உண்மையுடனும் மற்றவர்கள் உங்களிடம் நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்புவீர்கள்.

மேலும் பல விருப்பங்களை நீங்கள் சிந்திக்கக் கூடும். இப்புத்தகத்தில் காணப்படும் நற்காரியங்களும் உள்ளன. "நற்பண்பு" என்று அழைக்கப்படுகிற பண்புகளின் தொகுப்புரையை நீங்கள் இப்பொழுது மேலே பட்டியலிட்டிருக்கிறீர்கள்.

இவ்விருப்பங்களின் வழியில் ஒருவர் தினமும் தொடர்ந்து மற்றவர்களால் நடத்தப் படுவாரானால் அவரது வாழ்க்கை இன்ப வழியில் நிலைத்திருக்கும் என்று சொல்வதற்கு பெரிய ஆராய்ச்சி ஒன்றும் தேவையில்லை. தன்னை இவ்விதமாய் நடத்துபவர்களின் மனம் நோக ஒருவர் நடப்பார் என்பது சந்தேகத்துக்கிடமானதே.

மனித உறவுகளில் செயல்படும் ஆச்சரியமான தத்துவம[45] ஒன்று உண்டு. ஒருவர் மற்றவரிடம் சாடும் போது பதிலுக்கு மற்றவரும் அவரிடம் சாட தூண்டப்படுகிறார். ஒருவர் மற்றவரை நடத்தும் விதத்திலேயே அவரும் நடத்தப்படுவார். ஒருவர் தாம் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதற்கான மாதிரியை அவரே முன் வைக்கிறார். ஒருவர் மற்றவரிடம் தகுதியற்ற முறையில் நடந்தால் மற்றவர் அவரைத் தகுதியற்ற

45. தத்துவம்: அறியக்கூடிய உண்மை அல்லது நிகழ்வு.
முறையில் நடத்துவார். ஒருவர் மற்றவரிடம் நட்புடன் பழகினால் மற்றவரும் அவரிடம் நட்புடன் நடப்பார். இத்தத்துவம் எல்லா உறவுகளிலும் செயல்படுவதை நீங்கள் கண்டிருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன்.

ஜார்ஜ் எல்லா பெண்களையும் வெறுக்கிறார். ஆகையால் எல்லா பெண்களும் ஜார்ஜை வெறுக்கத் தலைப்படுகிறார்கள். கார்லோஸ் மற்றவர்களிடத்தில் கடினமாக நடந்து கொள்ளுகிறான். ஆகையால் மற்றவர்கள் கார்லோஸிடம் கடினமாக நடந்து கொள்ள துவங்குகிறார்கள். ஒரு வேளை அக்கடினத்தை வெளிக்காட்டத் தயங்கலாம். ஆனாலும் ஆவலை ரகசியமாக மனதில் வளர்த்து அக்கடினத்தைக் காட்டக் கூடிய சந்தர்ப்பம் ஒன்றிற்காகக் காத்திருப்பார்கள்.

கற்பனை உலகமாகிய கதைகளிலும், திரைப்படங்களிலும் வில்லன் மரியாதையுடன் பழகுபவராகவும், மிகத் திறமையுடன் செயல்படும் குழுக்களின் தலைவராகவும், கதாநாயகனோ முரட்டு[46] தோற்றத்திலும் சித்தரிக்கப்படுகிறார்கள். நிஜ வாழ்க்கை அப்படி அல்ல. நிஜ வாழ்க்கை வில்லன்கள் மிக முரட்டுத் தனமுடையவர்களும், அவர்களுடைய அடியாட்கள் அவர்களை விட அதிகமான முரட்டுத்தனமுடையவர்களுமாய் இருக்கிறார்கள். நெப்போலியனும், ஹிட்லரும் கெட்டவர்கள் என அவர்களுடைய ஜனங்களாலேயே தீர்க்கப்பட்டார்கள். நிஜ வாழ்க்கைக் கதாநாயகர்களோ மிக அமைதியாகப் பேசுபவர்களும், தங்கள் நண்பர்களிடம் மரியாதையுடன் பழகுபவர்களுமாயிருக்கிறார்கள்.

தங்கள் துறைகளின் உயர்பதவிகளில் இருக்கும் மனிதர்களை சந்திக்கும் அதிர்ஷ்டம் ஒருவருக்குக் கிடைக்கும் போது, தாங்கள் சந்தித்த மனிதர்களிலேயே இவர்கள் தான் மிகவும் இனிதானவர்கள் என்ற முடிவுக்கு ஒருவர் வரமுடியும். அம்மனிதர்கள் மேல் பதவிகளில் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். அவர்களில் பெரும்பாலானவர்கள் மற்றவர்களை நல்ல விதமாய் நடத்த முயற்சிக்கிறார்கள். பதிலுக்கு மற்றவர்களும் அவர்களிடம் நல்ல விதமாய் நடந்து, அவர்களிடம் காணப்படும் சிறு குறைகளையும் மன்னித்து விடுகின்றனர்.

தன்னைப் பிறர் எவ்வாறு நடத்த வேண்டும் என்ற ஒருவரின் விருப்பங்களின் அடிப்படையில், மனித நற்பண்புகளை அவரே கண்டு பிடிக்க முடியும். "நன்னடத்தை" எது என்ற குழப்பத்தையும் ஒருவர் இம்முறையில் தீர்த்துக்கொள்ள முடியும். எவ்வித செயல்களிலும் ஈடுபடாமல் கைகளைக் கட்டிக் கொண்டு மௌனமாய் இருப்பது நன்னடத்தை ஆகாது. "நல்லவராயிருத்தல்" என்பது மிக சுறுசுறுப்புடன், ஆற்றல் மிகு செயல்களைச் செய்வதாகும்.

மௌனமாய், வாடலுடன் காணப்படுவதில் அதிக சந்தோசமில்லை. முற்காலத்தில் சிலர், நற்பண்புகளை அப்பியாசிக்க, பரிதாபமான சுய வெறுப்பு வாழ்க்கை வாழ வேண்டும் என்றுரைத்தனர். வாழ்வின் மகிழ்ச்சிகள் அனைத்தும்

46. முரட்டு: திருத்தப்படாத, முரட்டு சுபாவமுள்ள, நாகரிகமற்றவர்கள்.

தீய செயல்களிலிருந்து பிறக்கின்றன என்று அவர்கள் கணித்ததே அதற்குக் காரணம். இதைவிட உண்மைக்குப் புறம்பான காரியம் வேறு ஒன்றுமில்லை. சந்தோசமும், மகிழ்ச்சியும் ஒழுக்கக் கேடான காரியங்களில் இருந்து கிடைப்பதில்லை. மாறாக ஒழுக்கத்திலிருந்தே கிடைக்கின்றன. உண்மையான உள்ளங்களில் மட்டுமே மகிழ்ச்சியும் இன்பமும் பிறக்கின்றன. ஒழுக்கக் கேடானவர்கள், வேதனையும் வருத்தமும் நிறைந்து, பரிதாபமான வாழ்க்கையை வாழ்கிறார்கள். மனித நற்பண்புகளுக்கும், செயலற்ற மந்த நிலைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. வாழ்வின் பிரகாசமான பகுதிகள் நற்பண்புகளே.

ஒருவர் தன்னைச் சுற்றியுள்ளவர்களை, சீரிய மனதில் தோன்றும் நீதி, விசுவாசம், நல்லெண்ணம், பாரபட்சமின்மை, உண்மை, கனிவு, பரிவு, சுயகட்டுப்பாடு, சகிப்புத் தன்மை, மன்னிப்பு, உபகாரம், நம்பிக்கை, மதிப்பு, மரியாதை, பெருந்தன்மை, பாராட்டு, நட்பு, அன்புடன் நடத்தினால் என்ன சம்பவிக்கும் என்று எண்ணுகிறீர்கள்?

நீங்கள் ஒரு முடிவுக்கு வர நேரம் எடுத்துக் கொண்டாலும், மற்றவர்களும் இதே குண நலன்களுடன் பிறரை நடத்த முற்படுவார்கள் என நினைக்கத் தோன்ற வில்லையா?

தங்கள் உறுதியில் மனிதர்கள் தவறக்கூடிய சூழ் நிலைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். ஒருவருக்கு வரக்கூடிய துர்ச் செய்திகள் அவருடைய நிதானத்திலிருந்து அவரை நிலை குலையச் செய்யலாம். திருடன் கன்னமிடுகையில், அவன் எதிர்பாராத நேரம் அவனை தலையில் அடிக்க நேரிடலாம். வேலைக்குச் செல்ல தாமதமாகி விட்ட நிலையில், வேகமாக வாகனம் ஓட்ட அனுமதிக்கப்பட்டிருக்கும் சாலையில் வேகமாகச் செல்லுகையில், தனக்கு முன்னால் அதே சாலையில் மெதுவாக ஏதோ நினைவில் வாகனத்தை ஓட்டுபவரைக் காணும்போது ஆத்திரம் உண்டாகலாம். இவைகளெல்லாம் ஒருவர் தவறக் கூடிய சூழ்நிலைகளே. இப்படி தவறு செய்ய வாய்ப்பிருந்தும், ஒருவர் மனித உறவுகளில் மேம்பட்ட நிலைக்கு தன்னை உயர்த்திக் கொள்ள முடியும். இதனால் ஒருவருடைய நீடித்த வாழ்வின் நிச்சயம் அதிக உறுதியாகும். மெய்யாகவே ஒருவருடைய வாழ்க்கை அதிக நிச்சயமுள்ளதாயிருக்கும்.

தன்னை சுற்றியுள்ளவர்களின் நடவடிக்கைகளை ஒருவர் மேம்படுத்த இயலும். ஏற்கெனவே அதைச் செய்யாதவர்கள், ஒவ்வொரு நாளும் ஒரு நற்பண்பைத் தெரிந்து கொண்டு, அந்நாளில் அதை மற்றவர்களுடனான உறவில் அப்பியாசிப்பதன் மூலம் எளிதாகச் செய்ய முடியும். அப்படிச் செய்யும் போது அனைத்து நற்பண்புகளும் வளரக்கூடிய வாய்ப்புக்குள் மற்றவர்களும் வந்து விடுவார்கள்.

ஒருவர் பெறும் தனிப்பட்ட ஆதாயங்களுடன், மனித உறவுகளில் ஒரு புதிய சகாப்தத்தை தொடங்குவதிலும் பங்கு கொள்கிறவராக மாறுவார். அவருடைய பங்களிப்பு எவ்வளவு சிறிதானாலும் சிறப்பானதே.

குட்டையில் விழும் சிறு கல்லினால் எழும் சிற்றலைகள் குட்டையின் எல்லைகள் வரை செல்லுகின்றன.

“பிறர் உங்களை எப்படி நடத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களோ அவ்விதமாய் நீங்களும் பிறரை நடத்துங்கள்” என்ற கோட்பாட்டை பின்பற்றுவதால் மகிழ்ச்சியின் வழி மிகவும் பிரகாசமாகிறது.

21. செழித்து[47] ஓங்குக; வளர்ந்து பெருகுக[48]

ஒருவர் தன்னிலும், தன் நம்பிக்கைகள், கனவுகள், எதிர்காலம் ஆகியவற்றிலும் இருந்து, எதையாகிலும் சாதிக்காதபடிக்கு சில சமயங்களில் மற்றவர்கள் அவரை நசுக்கத் தேடுகின்றனர்.

அவருக்கு விரோதமாகத் தீய எண்ணம் கொண்ட ஒருவன் கேலியினாலும் மற்ற காரியங்களினாலும் அவருடைய வீழ்ச்சியைக் காட்சியாக்க முயற்சி செய்யக்கூடும்.

வாழ்வில் மகிழ்ச்சி பெறத் தன்னை சிறப்புறச் செய்யும் ஒருவரது முயற்சிகள் ஏதோ ஒரு காரணத்திற்காக மற்றவர்களுடையத் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடும்.

இத்தகையத் தாக்குதல்களை நேரடியாக சந்திப்பது சில சமயங்களில் உகந்ததே. ஆனாலும் தொலை நோக்கு சந்திப்பு ஒன்று உள்ளது. அது தோல்வியடைவது வெகு அபூர்வம்.

இத்தகைய மக்கள் மற்றவர்களுக்கு என்ன செய்ய முயற்சிக்கிறார்கள்? வாழ்வில் ஒருவரை கீழ் இறங்கச் செய்கிறார்கள். தங்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் அவர் ஆபத்தானவர் என்று எண்ணுகிறார்கள். அந்நபர் உலகில் முன்னேறினால் தங்களுக்கு இடைஞ்சலாக இருப்பார் எனக் கருதுகிறார்கள். எனவே பல வழிகளில் அந்நபரின் திறமைகளையும், செயல் ஆற்றலையும் அமுக்கிப் போட முயற்சிக்கிறார்கள். வெறிபிடித்த சிலர், கீழே காண்பது போன்று, பொதுவான திட்டங்களைக் கூட கொண்டிருக்கின்றனர், "திருவாளர் 'அ' காரியசித்தி பெற்றால் எனக்கு உறுத்தலாக இருப்பார். அதனால் அவர் காரிய சித்தியற்றவராக இருக்க என்னால் இயன்ற எத்தனங்கள் அத்தனையும் நான் செய்ய வேண்டும்". திருவாளர் 'அ', அவர்களுக்கு ஒரு பகைஞராக இல்லாதிருந்தபோதும், தங்கள் செயல்களினால் அவரில் ஒரு பகைஞரை தங்களுக்கு உருவாக்குவோம் என்பது அவர்களுக்குத் தோன்றுகிறதில்லை. இத்தகைய வெறியர்கள் பிரச்சனைகளை விலைக்கு வாங்குகிறார்கள் என்பது நிச்சயம். வேறு சிலரோ காரிய சித்தியுள்ளவர்கள் மேல் வரும் பொறாமையினாலும், மற்றும் சிலரோ அவரை "பிடிக்காததினாலும்" இச்செயல்களில் ஈடுபடுகின்றனர்.

47. செழிக்க: செயலிலும் உற்பத்தியிலும் காணப்படுதல், ஆதிக்கத்தில் விரிவடைதல், பொங்குதல், பிறர்காண செழித்தல்.
48. பெருகுக: பொருளாதார வெற்றி அடைதல், செய்யும் தொழிலில் வெற்றியடைதல்.

எந்த அடிப்படையில் இச்செயல்கள் செய்யப்பட்டாலும் அவற்றின் உண்மை நோக்கம் ஒன்றுதான். அவர்களுடைய எதிரியைத் தாழச் செய்து வாழ்வில் தோல்வியடையச் செய்ய வேண்டும் என்பதே.

இத்தகைய மக்களைக் கையாளவும், முறியடிக்கவும் செய்ய வேண்டிய காரியம் நீங்கள் செழித்து, பெருகுவதே.

இத்தகைய மக்கள் தங்கள் எதிரி மேலும் வளர்வதைக் கண்டு வெறியாகி இன்னும் அதிகமாகத் தாக்குதல்களில் ஈடுபடக் கூடும். அவர்களை நேரடியாக சமாளிப்பது கட்டாயமானால் அவ்விதத்தில் அவர்களைச் சந்தியுங்கள். ஆனாலும், செழிப்பதையும் பெருகுவதையும் விட்டு விடாதிருங்கள். உங்களுக்கு எதிரிகளாய் இருக்க விரும்புகிறவர்களுக்கு அவர்கள் விரும்புகிறதை அதிகமாகக் கொடுங்கள். அதற்கு நீங்கள் செழித்து பெருக வேண்டும்.

மேலும் மேலும் நீங்கள் செழித்துப் பெருகும் போது தங்களுடைய எதிர்ப்புக்கு எட்டாத இடத்துக்கு நீங்கள் போய் விட்டதைக் காணும் இத்தகைய மக்கள் தங்கள் எதிர்ப்பில் மனம் வைக்காது போவார்கள். சமயத்தில் முற்றிலும் எதிர்ப்பை விட்டு விடுவார்கள்.

ஒருவருடைய வாழ்வின் லட்சியம் உயர்ந்ததாயிருந்து அதில் ஒருவர் கவனத்துடனும், இப்புத்தகத்தில் காணப்படும் நியாயங்களின் வழியிலும் செயல்பட்டு, செழித்து பெருகினால், தன்னுடைய தலை முடி ஒன்றுக்கும் தீங்கின்றி நிச்சயமாகவே வெற்றியாளனாக கிரீடம் சூடுவார்.

செழித்து ஓங்குங்கள், வளர்ந்து பெருகுங்கள், என்பதே
உங்களுக்கு நான் சொல்லும் வாழ்த்து.

முடிவுரை

தகுதியான செயல்களில் ஈடுபட்டிருப்பதில் மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது. ஆனாலும் எந்தெந்த செயல்கள் ஒருவருக்கு மகிழ்ச்சியை அளிக்கும் என அவர் ஒருவர் தான் கூற முடியும்.

இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் யதார்த்தத்தில், ஒரு சாலையின் விளிம்புகள் போன்றவை. அவைகளை மீறும் ஒருவர், சாலையோர விளிம்புகளை மீறிச் சென்று விபத்துக்குள்ளாகும் வாகன ஓட்டியைப் போலிருக்கிறார். விளைவு, வாகனம் நொறுங்குகிறது; உறவுகள் அறுந்து போகின்றன;வாழ்வுபலியாகிறது.

நிகழ்காலத்திற்கும், உறவுகளுக்கும், வாழ்வின் இப்பகுதி மற்றும் கட்டத்திற்காகவும், நீங்கள் இலட்சியங்களை கொண்டிருக்கிறீர்கள். உங்கள் இலட்சிய சாலை எங்கே செல்கிறது என்பதை நீங்கள் மாத்திரமே சொல்ல இயலும்.

குப்பைகள் நிறைந்த தெருவில், காற்றடித்துச் செல்லும் சருகைப் போல் தன் நிலை ஒருவருக்குத் தோன்றலாம். மற்றவர், அசைவில்லாமல் சிக்கிக் கிடக்கும் சிறு மணலைப் போல வாழ்வை உணரலாம். வாழ்க்கை அமைதியும், கிரமமும் உள்ளது என்று ஒருவரும் சொல்லவில்லை. வாழ்க்கை அப்படிப்பட்டதல்ல என்றாலும், எவரும் காற்றடிக்கும் சருகும் அல்ல, சிக்கிக் கொண்ட மணலும் அல்ல. தன் வாழ்வின் இலட்சியப் பயண வரைபடத்தை வரைந்து அதைப் பின்பற்றுவது ஒருவருக்கு பெரும் அளவில் சாத்தியமே.

என்னுடைய பழைய சாலை மிகவும் மோசத்திற்குள்ளாக இருக்கிறது. இப்பொழுது ஏதும் மாற்றம் செய்வதற்கியலாது, மிகவும் பிந்திவிட்டது, எதிர் காலத்திற்கான வேறுபட்ட புதிய வரைபடம் வரைந்து பின்பற்ற வாய்ப்பில்லை என ஒருவர் நினைக்கக்கூடும். மனிதனின் வாழ்க்கைப் பாதையில் எவ்விடத்திலும் புதிய வரைபடம் வரைவதற்கான வாய்ப்புள்ளது. அவ்வாய்ப்பினை பயன்படுத்துங்கள். புதிய ஆரம்பம் செய்ய இயலாத உயிருள்ள மனிதன் ஒருவருமில்லை.

ஒருவரின் புதிய ஆரம்பத்தை மற்றவர்கள் பரிகசிப்பார்கள். பலவித ஏதுக்களினால் சாலையின் ஓரத்திற்கு அவரைத் தள்ள முயற்சிப்பார்கள். ஒழுக்கங்கெட்ட வாழ்க்கைக்குள் விழத்தள்ள, பல வழிகளில் ஆசை காண்பிப்பார்கள். இதில் சந்தேகமேயில்லை. தங்களுடைய சுய இலாப நோக்கங்களை நிறைவேற்றவே இப்படிச் செய்கிறார்கள். அவர்களுக்கு ஒருவன் செவி சாய்த்தால், வாழ்வு துக்கமும் பரிதாபமுமாகிவிடும்.

இப்புத்தகத்தின் நியாயங்களைத் தன் வாழ்வில் கடைபிடித்து மற்றவர்களையும் கடைபிடிக்கத் தூண்டும் போது, சில இழப்புகளை சந்திக்க நேரிடலாம். இவ்விழப்புகளிலிருந்து கற்கும் பாடத்தைக் கொண்டு தொடர்ந்து முன் செல்ல வேண்டும். சாலைகளில் மேடுகள் இராது என்று யார் சொன்னது! இருந்தாலும் அச்சாலைகளில் பயணம் செய்ய முடியும். ஒருவர் கீழே விழுவதால், எழுந்து தொடர்ந்து செல்ல இயலாது என்று பொருள் அல்ல.

சாலை விளிம்புகளை ஒருவர் கவனத்தில் கொண்டால், அவர் பெரிதான ஆபத்துகளுக்குள்ளாக வாய்ப்புகள் இல்லை. உண்மையான பரவசம், மகிழ்ச்சி, சந்தோசம் நொறுங்கும் வாழ்க்கையில் உண்டாவதில்லை. அவைகள் பத்திரமாகப் பயணிக்கும் வாழ்க்கையில் உண்டாகின்றன.

மக்களை தங்கள் சாலையில் கவனத்துடன் செல்லச் செய்யுங்கள். அப்பொழுது பிரச்சனைகளற்ற நேரம் உங்களுக்குத் தாராளமாகக் கிடைக்கும். உண்மையான சந்தோசம் என்ன என்பதை கண்டுபிடிக்கும் வாய்ப்பு அதினால் உங்களுக்கு உண்டாகும்.

சாலையின் ஓரங்களை அறிந்த ஓட்டுநருக்கு மகிழ்ச்சியின் வழி, அதிவேக சாலையாகும்.

நீங்களே அந்த ஓட்டுநர்!
உங்கள் பயணம் இனிதாகட்டும்!!

© 2005 L. Ron Hubbard Library. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.
அனுமதி பெறாது, முழுமையாகவோ, பகுதியாகவோ எவ் ஊடகத்தின் வாயிலாகவும் பிரதி எடுத்தல், மொழிபெயர்த்தல், இறக்குமதி மற்றும் விநியோகம் செய்தல், மின்பிரதி எடுத்தல், சேமித்தல், செலுத்துதல் காப்புரிமைச் சட்ட மீறல் ஆகும்.
THE WAY TO HAPPINESS (மகிழ்ச்சிக்கு வழி) மற்றும் சாலையும் சூரியனும் கொண்ட வணிக சின்னம் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் பிற நாடுகளிலும் (வனிகச் சின்னப் பதிவுகள் பெறப்பட்டு பிற பதிவுகள் நிலுவையில் உள்ளன.)

இப்புத்தகத்தின் கூடுதல் பிரதிகளுக்கு
கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்க.

The Way to HAPPINESS
FOUNDATION • INTERNATIONAL

201 East Broadway, Glendale, CA 91205
Phone: (800) 255-7906 or (818) 254-0600
Fax: (818) 254-0555 • Email: info@twth.org
or visit: www.thewaytohappiness.org

சமயம் சாராத முற்றிலும் பகுத்தறிவு அடிப்படையில் அமைந்த முதல் வாழ்வியல்க்கணம். எல். ரான் ஹப்பார்ட் அவர்களால் எழுதப் பட்டது. இப்புத்தகம் அவரது சொந்தப் படைப்பு ஆகும். இப்புத்தகம் எச்சமயக் கொள்கைகளின் பகுதியும் அன்று. இப்புத்தகத்தை மறுபதிப்பு செய்வதும், விநியோகம் செய்வதும், எம்மத நிறுவனங் களின் தொடர்போ, ஆதரவோ உள்ளதாகாது. அரசுத் துறைகளும், அரசு ஊழியர்களும், இப்புத்தகத்தை விநியோகிப்பது சமயம் சாராத செயல்களின் அடிப்படையில் அனுமதிக்கப் படக்கூடியது. (காப் புரிமையாளர் அல்லது அவரது தனிப்பிரதிநிதிகளிடம் மறுபதிப்பிற்கு ஒப்பாடு செய்யப் படக்கூடும்.) Tamil (Indian) Edition